
www.tamilarangam.net

இதழ் - 01
மே - ஜூன் 1996

# மனிதம்



ஜெயபாலனுடன்
நேர்காணல்



இனவாத அழுத்தத்தில்
மூழ்கிய. சமாதானத் தீர்வு!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மே - ஜுன் 1996

இதழ் - 01

ஆசிரியர்:
எம்.பௌசர்

தொடர்புகட்கு:

ஆசிரியர்,
"மூன்றாவது மனிதன்"
765/360, போதிராஜ மாவத்தை,
கொழும்பு - 10.

தருகை: 30/=

படைப்புகள் விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

உள்ளே....

**நேர்காணல்**
வ.ஐ.ச. ஜெயபாலன்

**விமர்சனம்**
தமிழ் சினிமாவின் போக்கு
''சிஹின தேசயென்''

**கவிதை**
றஷ்மி, பனிக்கர், ஜெயபாலன், ஷகீப், பௌசர்

**சிறுகதை**
ஈவ்லின், தாய்ப்பால்

**கட்டுரை**
காம்யூ, ஜே.வி.பி மீள்வருகை, கோமல், கவிதையின் எதிர்காலம்

# சமாதானம் வர மறுக்கும் இலங்கைத் தீவு

யுத்தம் அனைவரின் வாழ்க்கையையும் நெருக்குவாரத்திற்குள்ளாக்கி இருக்கிறது. கடந்த 15 வருடங்களாக இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் உள்நாட்டு யுத்தத்திற்கு முகம் கொடுத்து தாங்க முடியாத சுமையில் தவித்து நிற்கின்றனர்.

இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அகதி முகாம்களில் அழகிய மனிதவாழ்வு கசங்கிக் கிடக்கிறது.

கடந்த காலங்கள் இருண்ட பொழுதுகளாக இருந்தது எவ்வளவு உண்மையோ அதேபோல் எதிர்காலமும் நம்பிக்கை தருவனவாய் இல்லை; நம்பிக்கை தருவதற்கான சூழலை, அரசியல்வாதிகளும், இனவாதிகளும், மதவாதிகளும் நாளுக்கு நாள் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தமும் பெருகிவரும் கல்லறைகளும் மனிதவாழ்வைக் காவு கொண்டிருக்கிறது. சமாதானத்தைக் கொண்டுவருவதாக வந்த அரச இயந்திரம்; இப்போது யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் தங்களின் சுயநலன்களுக்காக கல்லறைகளை நோக்கி மக்களை அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இனவாதிகள் தாங்கள் சார்ந்த இனத்தை காப்பதாக நினைத்துக் கொண்டு ஏனைய இனத்தவர்களை நசுக்கி விட கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அபாயகரமான சூழலில்; மனித நேயமிக்க படைப்பாளிகள், கலைஞர்களின் பங்களிப்பு யாது என்பது மிகவும் அக்கறைக்குரிய கேள்வியாகும்.

சிலி நாட்டுக் கவிஞன் பப்லே நெருடா தொடக்கம் நமது பாரதி வரை மனித சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் எழுப்பிய குரல்கள் நம்மை இன்னும் வந்தடையவில்லையா?

மனித நேயமிக்க படைப்பாளிகளின், கலைஞர்களின் மௌனத்தை தகர்த்த குரல்கள் நமது இன்னல்களை மறக்கும் நம்பிக்கையாக வெளிவரவேண்டும். வெளிவரும் என்ற நம்பிக்கைதான் 'மூன்றாவது மனிதனின்' அசைக்க முடியாத தளமாகும். நாளைய நம்பிக்கைக்கான சூழலுக்காக .....

தென்னிலங்கையிலிருந்து எழுக குரல்கள்!

வட கிழக்கிலிருந்து எழுக குரல்கள்!!

ஆசிரியர்

www.tamilarangam.net



## நேர்காணல்

# வ.ஐ.ச. ஜெயபாலன்



ஈழத்திலும் ஈழத்திற்கு வெளியேயும் பலராலும் அறியப்பட்ட படைப்பாளி, ஆய்வாளர் - வ.ஐ.ச. ஜெயபாலன்.

''ஒரு அகதியின் பாடல்'', ''சூரியனோடு பேசுதல்'', ''ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்'', ''நமக்கென்றொரு புல்வெளி'' ஆகிய கவிதைத் தொகுதிகளைத் தந்தவர்.

ஐரோப்பிய நாடுகளிலும் தனது கவிதைகளினால், ஆய்வு முயற்சிகளினால் அறியப்பட்டவர்.

''நோர்வே'' எழுத்தாளர் சங்கத்தினால் வெளிநாட்டு எழுத்தாளர்களுக்கான விருது; நோர்வே மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இவரது கவிதைக்கும் 'செக்குமாடு'க் குறுநாவலுக்கும் கிடைத்தது,

ஆங்கிலத்தில் இவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் ''இலங்கை இன மோதல்களின் சூழலின் பிரதிபலிப்புகள்'' ''சமூக பொருளாதார அபிவிருத்தி வரலாறு - மட்டக்களப்பு மாவட்டம்'' என்பன மிகுந்த அக்கறைக்குரியன.

தமிழில் இவரது ஆய்வுக் கட்டுரைகளில் ''சாதி அமைப்பும் இலங்கைத் தமிழ் மக்களும், ''யாழ்ப்பாணத்து மாவட்டத்து அடிமைமுறை'' என்பன பல்வேறு தளங்களில் உரத்துப் பேசப்பட்டன.

''தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்'' என்ற இவரது நூல் முஸ்லிம்கள் பற்றிய ஆய்வு முயற்சியின் முதற்படியாகும்.

ஒடுக்கப்பட்ட தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் பின்தங்கிய சிங்கள மக்களுக்காகவே, இவரது அனைத்து ஆற்றல்களும் செலவிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பணியிலேயே வாழ்ந்து மடியவும் தயார் என்கிறார் வ.ஐ.ச.ஜெயபாலன்.

## "நான் உமர்கய்யாமாவதற்குரிய எல்லாத் தகுதிகளையும் கொண்டிருந்தேன்"

www.tamilarangam.net



**★ *நீங்கள் எழுத ஆரம்பித்ததிற்கும் எழுதுவதற்கும் காரணமான பின்புலத்தை சொல்ல முடியுமா?***

இத்தகைய ஒரு கேள்விக்கு ஒரே தருணத்தில் உலகின் எந்த எழுத்தாளனாவது சரியான பதிலை கூறிவிடமுடியுமென நான் கருதவில்லை. எனக்குக் கூட, வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு காரணங்கள் தோன்றியதுண்டு. சின்ன வயதில் மோதலும் காதலுமாக கிழிபட்டும் ஒட்டியும் வாழ்ந்த எனது தாய் தந்தையின் இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்வில், அவர்களுடைய பொது ஈடுபாடுடைய துறையாக கவிதை இருந்ததை இப்போது நினைத்துப் பார்க்கும் போதும் ஆச்சரியமாகவிருக்கிறது.

அவர்கள் தமிழக சஞ்சிகைகளிலும் ஒரு சில ஈழத்துச் சஞ்சிகைகளிலும் வந்த கவிதைகளையெல்லாம் தேர்ந்தெடுத்து பிரதிபண்ணி வைத்திருந்தார்கள். ஆங்கில கல்வியறிவுள்ளவரான எனது அம்மா, தமிழில் கேள்வி ஞானமும் புலமையும் உள்ள வர்த்தகரான எனது அப்பாவும் வீட்டுக்கு வருகிற விருந்தாளிகளோடு கம்பராமாயணத்திலிருந்து பாரதியார் வரை வியந்தும் பாராட்டியும் பாடியும் ரசித்து மகிழ்வதை நான் சிறுவயதிலிருந்தே கேட்டிருக்கிறேன்.

சின்னவயதில் பாரதியார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் இருவரும் என்மீது ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தார்கள் என்றே கூறவேண்டும். பின்னர் இடைக்காலப் பருவத்தில் முதலில் தேசிகவிநாயகம்பிள்ளை மொழி பெயர்த்த உமர்கய்யாம் பாடல்களையும் பின்னர் தமிழில் கிடைத்த அத்தனை மொழிபெயர்ப்புகளையும் நான் வாசித்திருக்கிறேன். உமர் கய்யாமிலிருந்து கலில் ஜிப்ரான் போன்ற ''சூபி'' அரபிக் கவிஞர்கள். பின்னர் தேவாரம், திருவாசகம், பைபிள், குர்ஆன் போன்ற சமயநூல்களிலும் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

திரும்பவும் நான் பாரதியாரை வாசிக்க ஆரம்பித்தேன். பாரதியிலிருந்து சங்க இலக்கியத்தினுள் புகுந்தேன். நான் இன்றைக்கும் பாரதியாருக்கும் சங்க இலக்கியத்திற்குமிடையேதான் எங்கோ நிற்கிறேன் எனக் கருதுகிறேன்.

எனது எழுத்தும் இப்படித்தான் ஆரம்பமாயிற்று. நானொரு உமர்கய்யாமாக வருவதற்கான எல்லாத் தகுதிகளையும் கொண்டிருந்தேன். நான் ஏன் உமர்கய்யாமுடைய பாதையிலோ அல்லது தாகூருடைய பாதையிலோ செல்லவில்லை என்பதற்கும் எனது பாதை எப்படி ஏற்பட்டது என்பதற்கும் எனது அறிவிற்கு தட்டுப்படும் பதில் 1960களில் நானொரு பதின்ம வயதுக் காரனாக இருந்தபோது தோற்றம் பெற்று யாழ்ப்பாணத்து கிடுகுவேலிகளையெல்லாம் பிடித்து உலுப்பிய சாதி எதிர்ப்பு போராட்டம்தான் எனப்படுகின்றது. ஒரு வர்த்தக நிலவுடைமையாளரின் பிள்ளையாக இருந்தபோது எனது கனவு பாரிஸ் சென்று கட்டிடக் கலைஞனாகவும் சிற்பியாகவும் உருவாவதாகவே இருந்தது. ஆனால் என்னை மண்ணுக்குக் கொண்டு வந்ததும் மனிதனாக்கியதும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராளிகளே!

நான் கண்டிராத ஆனால் கேட்டு வியப்படைந்த போராளி ''யோவேல் போல்'' நான் கண்டிருந்த போராளிகள் எம்.சி.சுப்ரமணியம், கே.டானியல், எஸ்.ரி.என், நாகரத்தினம், இக்பால். இவர்களுடனான தோழமை என்னை மனிதனாக்கியது. இப்படித்தான் நான் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டேன். இப்படித்தான் நான் உமர்கய்யாம் அல்லது தாகூருடைய பீடத்திலிருந்தும் துரத்தப்பட்டேன். இன்று வரைக்கும் அலைகிறேன், தேடுகிறேன், ஒடுக்கப்பட்டவர்களுக்காக போராடுபவர்களை காதலிக்கிறேன். அவர்களே ஒடுக்குபவர்களாக மாறும்போது விமர்சிக்கிறேன். எனக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் மீது ஏற்பட்ட ஈடுபாடுதான் தமிழர்கள் மீதும், முஸ்லிம்கள் மீதும், மலையகத் தமிழர்கள்

www.tamilarangam.net



மீதும், தென்னிலங்கையிலும், உலர்வலயத்தி லும், காட்டுப்புறங்களிலும், சேனைப் பயிர்ச் செய்கையில் புறந்தள்ளப்பட்ட சிங்களவர் மீதும் ஈடுபாடாக ஊற்றெடுக்கிறது.

*** தொடர்ந்தும் அரசியலை கருத்தியலோடு விமர்சிக்கும் ஒருவன் என்ற ரீதியில் இன்றைய சூழலைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நான், இத்தீவின் மக்களும், தென்னாசிய மக்களும் சுபிட்சமாக வாழ வேண்டும் என்றும் உலகத்தின் சுபிட்சத்திற்கு அனைவரும் பங்களிக்க வேண்டும் என்றும் விரும்புபவன். சமஷ்டி இலங்கை, வடகிழக்கு மாகாண அமைப்பில் தமிழர்களோடு முஸ்லிம்களும் சிங்களவர்களும் தத்தமது பிரதேச மட்டத்திலும் சமஷ்டி அரசு அமைப்பு மட்டத்திலும் சமத்துவம் உறுதிப்பட்ட நிலைமையில் வாழும் வழி ஏற்படுத்தக்கூடிய ஒரு அரசியலமைப்பே இந்த நாட்டுக்குத் தேவை!

தமிழகத்துடனும் இந்தியாவுடனும் தென்னாசியாவுடனான இறுக்கமான நட்பு இந்த நாட்டிற்கான சுபிட்சத்திற்கு அவசியமான தாகும். மலையக மக்களும், மலையகப் பிரதேச முஸ்லிம்களும் கண்டிச் சிங்கள மக்களும் தமக்குள் உள்ள பிரச்சினைகளை பேசித் தீர்க்க வேண்டிய தருணமும் இதுவே. இவர்களுக்கு மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம், பதுளை மாவட்டம் இணைந்த அரசியல் அலகு மிகச் சிறந்த வாய்ப்பை வழங்கும் என நான் நம்புகின்றேன். பின்தள்ளப்பட்ட உலர்வலய சிங்கள மக்களுக்கும் தென்னிலங்கை மக்களுக்கு மிடையிலும் அபிவிருத்திக்கேற்ற அலகொன்று உருவாக்கப்படல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு நீண்டகால அடிப்படையில் இணைந்த தமிழ், முஸ்லிம் சிங்களமக்களது உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற வடகிழக்கு மாகாணமே சிறந்த தீர்ப்பாக அமையுமென நான் நம்புகிறேன். கடந்த 20 வருடங்களுக்குள் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரங்களை ஆராயும் ஒருவர் அவற்றில் வேறு இடங்களி லிருந்து வந்த தமிழ் ஆயுதபாணிகள் கலந்து கொண்ட போதும் அடிப்படையில் அது அம்பாறை மாவட்ட தமிழர்களைச் சார்ந்திருந்தது என்பதை உணர்ந்து கொள்வர்.

90களில் இடம்பெற்ற புலிகள் சம்பந்தப்பட்ட முஸ்லிம்களின் இரத்தக் களரிகளிலும் அம்பாறை மாவட்ட தமிழர்கள் எதிர்காலம் பற்றிய பயம் கிளப்பிவிடப்பட்டதே முக்கிய அடிப்படையாக இருந்தது என்பதை ஒரு ஆய்வாளன் என்ற முறையில் தகவல்களின் அடிப்படையில் உணர்கிறேன். எனவே அம்பாறை மாவட்ட தமிழர்களை உள்ளடக்கிய முஸ்லிம்களுக்கான தனி அலகென்பது வெடிகுண்டை வயிற்றில் கட்டி வைத்திருக்கும் அலகுதான். இத்தகைய ஒரு அலகை கொழும்பில் இடப்படும் ஒரு கையெழுத்தின் ஊடாக பெறுவதில் சாத்தியமில்லை.

எனவே முஸ்லிம்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

முதலாவது வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிக்களுக்குதனி அதிகார அலகொன்றைக் கோருவது. இது கூட வடமாகாண முஸ்லிம் மக்கள் மத்தியில் எந்தளவு வரவேற்பைப் பெறும் என்பதில் பலத்த சந்தேகமுள்ளது.

இரண்டாவதாக சிங்கள மக்களையும் உள்ளடக்கிய வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெறக்கூடிய அத்தனை பாதுகாப் பையும் உரிமைகளையும் பெறுவதற்கான போராட்டம். இதுவே எனக்கு நீண்டகால அடிப்படையில் நலன் தருவதாகவும் முஸ்லிம் மக்களுக்கு சாத்தியப்படக் கூடியதாகவும் எனக்குப்படுகிறது.

முஸ்லிம் தலைவர்கள் ஒரு ரஞ்சன் விஜேரட்னாவாகவோ, ஒரு அத்துலத் முதலியாகவோ அல்லது ஒரு ரத்வத்தை யாகவோ வேஷம் போடுவது முஸ்லிம்


www.tamilarangam.net



மக்களின் நீண்டகால நலன்களுக்கு எந்தவிதத்திலும் உதவப்போவதில்லை. அதேசமயம், தமிழ்த் தலைவர்கள் ஒரு பண்டாரநாயக்கவாகவோ ஒரு ஜே.ஆர் ஆகவோ ஏன் சிரித்த முகமுடைய சந்திரிகாவாகவோ மாறுவது நீண்ட கால நோக்குடைய தமிழர்களின் சுபிட்சத்திற்கும் உதவப் போவதில்லை.

ஒரு எழுத்தாளன் என்ற முடிவிலும், ஒரு ஆய்வாளன் என்ற முடிவிலும் வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு விசயங்களை வலியுறுத்தினாலும் இச் செய்தியையே நான் முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறேன்.

> ‘சிறந்த இலக்கியங்கள் உருவாகக் கூடிய தருணங்கள் ஏற்கனவே உருவாகியுள்ளது. இவ்வுருவாக்கத்தில் ஏற்கனவே எழுதுபவர்களுக்கு ஒரு பங்கு இருக்கிறது. ஒரு மகாகவியோ அல்லது மாபெரும் எழுத்தாளனோ இனித்தான் தோன்ற வேண்டும். ஏற்கனவே எழுதிவரும் யாராவது அப்படி மேம்படலாம். அல்லது புதியவர்கள் மேம்படலாம். மேம்படவேண்டும். தமிழ்; தமிழர்களுடைய மொழி மட்டுமல்ல, தமிழ்- தமிழர்களுடையதும், முஸ்லிம்களுடையதும், மலையகத் தமிழர்களுடையதும் மொழி.’



**★ *தலித் இலக்கியம், தலித் அரசியல் போன்ற பதங்களை நீங்கள் எக்கண்ணோட்டத்தில் நோக்குகிறீர்கள்?***

ஒரு ஒடுக்குதல் இருக்கும் வரைக்கும் ஒடுக்குவதற்கு எதிரான போராட்டம் இருக்கும். ஒரு போராட்டம் இருக்கும் வரைக்கும் அப்போராட்டத்தை ஆதரிக்கும் சமூகக் குழுக்கள் இருக்கும். அவர்களுடைய கலை இலக்கியங்கள் இருக்கும். தலித்துகளின் ஈழத்துப் பிரிவினரே என்னை மனிதராக்கினர். அவர்களே என்னுடைய நல்லாசான்களாக இருந்தார்கள்.

சாதிரீதியான ஒடுக்குதல்கள் இருக்கும் வரைக்கும் தலித் இலக்கியத்தின் அவசியத்தை நிராகரிக்கிறவன் அடிப்படையில் நாகரீகமானதொரு சாதிவெறியனாகவே இருப்பான். ஆனால், தலித் இலக்கியங்களும் தலித் அரசியலும் ஒரு நேர்மையான அரசியல், கலை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது என நான் கருதவில்லை.

**★ *கவிதை, சிறுகதை, நாவல் போன்ற துறைகளில் ஈழத்தில் தோன்றிய தவிர்க்கவியலாமல் ஏற்றுக் கொள்ளக் கூடிய படைப்பாளிகள் யார்?***

இக் கேள்வி எனக்கு சற்று அச்சத்தை தருகிறது. நானொரு புறத்தில் இரண்டு தண்டவாளத்தில் கால்வைத்தவொரு ரெயில் எஞ்ஜினைப் போன்ற மனிதன்,

ஒரு புறத்தில் கலைஞனாகவும் மறுபுறத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக அரசியல் ஆய்வாளனாகவும் வாழ்கின்ற எனக்கு பாரிய அளவிலான இலக்கியத் தேடலுக்கான நேரஅவகாசம் குறைவே. நான்பல உன்னதமான எழுத்தாளர்களின் பெயர்களை தவற விட்டுவிடுவேன் என்பதை அறிவேன். எனினும் நான் வாசித்தவற்றில் எனது மனதில் அழியாதிருக்கும் சில பெயர்களை நான் குறிப்பிடலாம்.

www.tamilarangam.net



நாவல்களைப் பொறுத்தவரை கே.டானியலு டைய எல்லா நாவல்களையும் படிக்கக் கிடைக்கவில்லை, ஆனால் அவருடைய ''கானல்'' நாவல் ஒரு மகத்தான சிருஷ்டி. தாமரைச் செல்வியின் ''தாகம்'' இனித்தான் வாசிக்கவிருக்கிறேன்.

சிறுகதையைப் பொறுத்தவரையில் சட்டநாதன், பித்தன் (ஷா), ரஞ்சகுமார், உமாவரதராஜன், எஸ்.எல்.எம்.ஹனீபா, செ.குணரட்ணம், கவியுவன் என்பவர்களின் படைப்புகளைச் சொல்லலாம்.

கவிதையைப் பொறுத்தவரையில், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், நீலாவாணன், மகாகவி, சண்முகம் சிவலிங்கம், நுஃமான், சிவசேகரம், சேரன், சோலைக்கிளி, வாசுதேவன், சிவ ரமணி, ஔவை, ஊர்வசி, பௌசர், நட்சத்திரன் செவ்விந்தியன், யேசுராசா, பொன்னம்பலம், மைதிலி அருளையா, வில்வரத்தினம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். எதிர் காலத்தில் கவிதை பற்றிய கலந்துரையாடல் களில் புதுவை இரத்தினதுரை, வானதி ரத்தினம் போன்றவர்களின் பங்களிப்பு பற்றியும் ஆராயப்படல் வேண்டும்.

* ***சூழலின் இறுக்கம் காரணமாக ஈழத்திலி ருந்து பிறக்கும் கவிதைகள்; இலக்கிய முயற் சிகள் பற்றி உங்கள் விமர்சனக் கண்ணோட்டமென்ன?***

ஈழத்து இலக்கியம் பற்றி நிறைய பம்மாத்து கோட்பாடுகள் உள்ளன. இக் கோட்பாடுகள் இப்போது பல்கலைக்கழக மட்டத்து அங்கீ காரம் பெற்றவையாக போய்விட்டது. இன் றைய ஈழத்து இலக்கியப் பரம்பரை மகாகவி யின் காலத்திலிருந்து பட்டியல் போடப்படு கிறது. ஈழத்திற்கு பரவலான வெளியீட்டுப் பாரம்பரியம் இல்லை.

நவீன இலக்கியப் பாரம்பரியம் தோன்றிய காலங்களிலிருந்து இன்றுவரையும் கூட, பரவ லான வாசகர்கள் தமிழ்நாட்டிலிருந்து வரும் இலக்கியப் புத்தகங்களைத்தான் வாசித்து வருகின்றனர். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் கவிதைப் புத்தகத்தைத் தவிர எனது இளமைக் காலத்தில் நான் வாசித்தது, இந்தியா வில் இருந்து வந்த கவிதைப் புத்தகங்களைத் தான். மகாகவியையோ, நீலாவாணனையோ என்னுடைய பல்கலைக்கழக காலங்களில் எம்.ஏ.நுஃமான் புத்தகம் போட்டவுடன்தான் அறிந்து கொண்டேன். இன்றைக்கும் கூட எங்கள் பலரின் புத்தகங்கள் சந்தையில் இல்லை.

தெரிவு செய்வதன் அடிப்படையில் வாசிப்பவர்களைத் தவிர, ஏனையவர்கள் தமிழ்நாட்டு கவிஞர்களின் கவிதைகளைத்தான் வாசிக்கக்கூடியதாகவிருக்கிறது. எனவே ஈழத்து இலக்கியப் பாரம்பரியம் பற்றி பட்டியல் போடுகிற பலர் கவிதை வாசிக்கிறவர்கள் கவிதை எழுதுபவர்கள் பற்றிய சமூக அறிவு இல்லாமல் தான் பலபேர் எழுதுகின்றனர். ஈழத்துக் கவிதைகள் வாசிக்கின்ற மரபு வந்து 70க்குப்பின் தமிழ்பேசும் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாக வெளிவந்த சிறுசஞ்சிகைகளின் வரவுடனேயே ஆரம்பிக்கின்றது.

கவிதை எழுதுபவன் பெரும்பாலும் வெளிநாட் டுக் கவிதைகளின் மொழிபெயர்ப்புக்களை இப்போது வாசிக்கிறான். எனவே பட்டியல் போடுவது உண்மையான கவிஞர்களை நேர்முகம் கண்டு, ஆய்வு செய்து முடிவுக்கு வரல் வேண்டும். விமர்சனம் 60களிலும் சரி, 70களிலும் சரி, 80களிலும் சரி அறிவாளிகளின் தர்க்கமாகவே அமைகிறது. விமர்சனம் என்பதை எப்போதும் ஒரு வெறும் தர்க்கமாக நான் பார்க்கவிரும்பவில்லை.

ஈழத்துக் கவிஞர்கள் எழுத்தாளர்களுக்கு இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் இருப்பது ஒரு பெரும் புகழும் பற்றியது, இதில் எங்களுடைய உழைப்பு கொஞ்சம்தான். ஈழத்தில் நடக்கும் போராட்டம் தொடர்பாய் எங்களுக்கு தகுதிக்கு மீறிய புகழ் கிடைத்திருக்கிறது. எங்களிடம் திறமை இல்லாமல் இல்லை. சிறந்த கலை இலக்கியங்கள் பிறக்கக்கூடியவாறு சமூகம்

www.tamilarangam.net



கருக் கொண்டிருக்கும் காலமும் இதுதான். ஆனாலும் எங்களிடம் உழைப்புக்காணாது. புத்தகங்கள் வெளியிடுவதற்கு ஆர்வமுள்ள வர்கள் யாரும் இல்லை. வெளிநாட்டில் வசதியோடு இருப்பவர்கள் கூடப் புத்தக வெளியீடு பற்றி யோசிப்பதில்லை.

சிறந்த இலக்கியங்கள் உருவாகக் கூடிய தருணங்கள் ஏற்கனவே உருவாகியுள்ளது. இவ்வுருவாக்கத்தில் ஏற்கனவே எழுதுபவர்களுக்கு ஒரு பங்கு இருக்கிறது. ஒரு மகாகவியோ அல்லது மாபெரும் எழுத்தாளனோ இனித்தான் தோன்ற வேண்டும். ஏற்கனவே எழுதிவரும் யாராவது அப்படி மேம்படலாம். அல்லது புதியவர்கள் மேம்படலாம். மேம்படவேண்டும். தமிழ்; தமிழர்களுடைய மொழி மட்டுமல்ல, தமிழ்-தமிழர்களுடையதும், முஸ்லிம்களுடையதும், மலையகத் தமிழர்களுடையதும் மொழி.

★ ***ஈழத்தில் ஆரோக்கியமான விமர்சனப் போக்கு இன்னும் வளரவில்லை என முன்வைக்கப்படும் விவாதம் குறித்து:-***

என்னைப் பொறுத்தவரை நானொரு விமர்சகன் அல்ல. முழுமையான உண்மையோ அல்லது எக்காலத்திற்குமான ஆரோக்கியமான விமர்சனமோ உள்ளதாக கருதியதில்லை. நேர்மையானதும், உண்மையான தேடல்களில் தீவிரமான ஈடுபாட்டிலிருந்து தோன்றும் கலை இலக்கியம் பற்றிய விவாதங்களாகவே நான் விமர்சனங்களை பார்க்கிறேன்.

குறிப்பிட்ட எந்த விமர்சகர்களிடமிருந்துமல்ல அவர்களது பல்வேறு கருத்துக்கள் வாதப் பிரதிவாதங்களிலிருந்துதான் கற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போது பல்வேறு புதுப்புது படைப்புகள் பற்றிய விமர்சனங்கள், அடிப்படை பிரதிவாதங்கள் தமிழக இலக்கிய சஞ்சிகைகளில் வெளிவருகின்றன. அத்தகைய சர்ச்சைகள் நமது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஊக்குவிக்கப்படவில்லை.

★ ***ஈழத்து நாடகத்துறைபற்றிச் சொல்லுங்கள்:-***

கலை இலக்கிய படைப்பாளனாக இருப்பது வேறு, கலை இலக்கிய அறிஞனாக இருப்பது வேறு என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். நாடகம்பற்றிய எனது அறிவு சொற்பமே. எனக்குத் தெரிந்ததெல்லாம் குழந்தை சண்முகலிங்கம், தாசீசியஸ், சிதம்பரநாதன், மௌனகுரு போன்றவர் களையும் பாலேந்திரா, நித்தியானந்தன், நிர்மலா போன்றவர்கள் மட்டுமே.

நாடகத்துறையின் சமகால வளர்ச்சி பற்றி நானொரு குருடனின் நிலையிலேயே உள்ளேன். எனினும் நாடகம் பல முகங்களைக் கொண்ட ஒரு மகத்தான சக்தி வாய்ந்த தேவதை, ஆனால் இலங்கை தமிழ் நாடகக் காரர்கள் அதையொரு நிகழ்த்திக் காட்ட லாகவோ அல்லது கூத்து நாடகமாகவோ மட்டுமே புரிந்து வைத்திருக்கிறார்கள் என நினைக்கத் தோன்றுகிறது.

நான் என்னை ஆட்கொண்ட ஈழத்து கலைவடிவமாக மட்டக்களப்பு வடமோடிக் கலையை தவறாது குறிப்பிட விரும்புகிறேன். இத் தருணத்தில் கிழக்கு பல்கலைக் கழகத்திற்குள் வசதியாகப் புகுந்து கொண்டுள்ள செ.யோகராசா அவர்கள் மட்டக்களப்பில் போற்றத்தக்க கலைத்துவம் இல்லையென்று புதிய விசக் கருத்துக்களை ''விடிவானம்'' போன்ற பத்திரிகைகளில் எழுதியது கண்டு அதிர்ச்சியடைகிறேன்.

இத்தகைய புதிய யாழ்ப்பாண விசக் கருத்துக்கள் நச்சுப் பாம்புகள் போல் எதிர் கொள்ளப்படல் வேண்டும்.

★ ***புலம்பெயர் நாடுகளில் இன்று வெளிவரும் இலக்கிய முயற்சிகளின் பின்தளம், உள்ளீடு பற்றி உங்கள் கருத்தென்ன?***

ஐரோப்பாவில் நடக்கும் பல இலக்கிய சந்திப்புக்களில் கலந்து கொண்டவன் நான்; இச் சந்திப்புக்களில் கலந்து கொள்பவர்கள் பற்றி, புலம்பெயர் எழுத்தாளர்கள் பற்றி எனது உற்ற நண்பனான மு.நித்தியானந்தன் கூறும் ஒரு விசயத்தை எடுத்தாளலாம் என நினைக்கிறேன்.

www.tamilarangam.net



ஒரு தடவை பாரிஸ் நகர மதுச்சாலையொன்றிலிருந்து அளவளாவிக் கொண்டிருந்த போது அவன் சொன்னான் ''எங்கட காலத்தைப் போல இல்லை, பெர்லினில் சுசிந்திரன் ஜேர்மன் மொழியில் மாபெரும் ''குண்டக் கிராசின்'' மூலப்பிரதியை வாசிக்கிறான். பாரிசில் கலாமோகன் பிரெஞ்சு இலக்கியங்களை பிரெஞ்சு மொழியில் வாசிக்கிறான். பாரதிதாசன் பிராங்க்பேட்டில் கார்ஸ் மாக்ஸினுடைய கையெழுத்துப் பிரதியை வாசிக்கிறான். இப்படியான உயிர்ப்புள்ள ஒரு தலைமுறை புலம்பெயர் எழுத்தாளர்கள் மத்தியில் இருந்தும் ஆர்வலர்கள் மத்தியில் இருந்தும் தோன்றுகிறது'' என்ற கருத்தை வலியுறுத்தினான். இதன் உண்மையை நான் புரிந்து கொள்கிறேன்.

நானொரு கவிஞன் என்ற வகையில் ஜேர்மனியிலிருந்து சுசிந்திரன் கொண்டு வரும் கருத்துக்கள், பிரெஞ்சு இலக்கியத்தின் அடித்தளத்திலிருந்து கலாமோகன் கொண்டு வரும் கருத்துக்கள், ஜேர்மனிய தத்துவத்திலிருந்து பாரதிதாசன் கொண்டு வரும் கருத்துக்கள் நமது வாழ்விலிருந்து கொண்டு வரும் கருத்துக்கள் போலவே அடுத்த தலைமுறைப் படைப்பாளியை உருவாக்கப் போகின்ற நமது மகத்தான கலைஞன் உருவாகின்ற ஆதாரங்களாகும்.

***மலையகத் தமிழ் மக்கள் பற்றி ஏதாவது ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்களா?***

மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற வகையில், இயல்பாகவே எனது அக்கறையும் ஆய்வும் குவியத் தொடங்குகிறது. 83ம் ஆண்டு தேசிய இனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும் என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதிய போது இருந்த ஆர்வத்துடன் மலையக தமிழ் மக்களின் இனத்துவ வளர்ச்சி பற்றிய ஒரு நூலை எழுதுவதற்கான ஆய்வில் ஈடுபட்டிருக்கிறேன்.

***முஸ்லிம் மக்கள் தொடர்பான உங்கள் நீண்டகாலத் தேடலின் ஊடான பயணத்தின் வெளிப்பாடு யாது?***

நான் என்னை தமிழ்பேசும் மகனாகவே உணர்கிறேன். இந்தக் கருத்தியல் தோல்வியடைந்து விட்டதாக பலரும் கூறுகின்றனர். நான் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, நான் இறக்கும்போது எனது பிள்ளைகளிடமும் எனது நண்பர்களிடமும் எனது கொடியைக் கொடுத்து விட்டே இறக்கவிரும்புகிறேன்.

என்னைப் பற்றித் தீவிரமான தமிழர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றியோ, என்னைப் பற்றித் தீவிரமான முஸ்லிம்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றியோ எனக்குக் கவலை இல்லை.

83ம் ஆண்டு முஸ்லிம்கள் பற்றிய எனது ஆய்வுநூலை எழுதியபோது பல்வேறு முஸ்லிம் ஆய்வாளர்கள் எனது பணியைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையுடனேயே எழுதினேன். எனது நம்பிக்கை பெரிய பதவிகளுக்காகவும், பெரிய இடத்து திருமணங்களுக்காகவும் அரசியல் செல்வாக்குகளுக்காகவும் அற்ப சொற்ப நலன்களுக்காகவும் விற்கப்பட்டு விட்டது.

சமூகப் பார்வையுள்ள இளைய முஸ்லிம் சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள் எதிர்காலத்தில் தோன்றுவார்கள் என்ற எனது நம்பிக்கை இன்னும் பொய்த்து விட்டதாக நான் நினைக்கவில்லை.

> வீரம் தேவைப்படுகிற காலம்
> உண்மையாகவே வந்து விட்டது.
> ஒவ்வொருவரும் உணர்ச்சியைத்
> தட்டியெழுப்புகிற தெளிவான விசயங்களை
> விரும்புகிறார்கள். - அதாவது
> இன்றுநடைமுறையிலுள்ள நமது
> வாழ்க்கைக்குப் பதிலாக இதைவிட உயர்ந்த
> மட்டத்திலுள்ள சிறந்த அழகான
> வாழ்க்கையை விரும்புகிறார்கள்.
>
> மாக்ஸிம் கார்க்கி

www.tamilarangam.net



# தமிழ் சினிமாவின் இன்றைய போக்கு

## வசீகரக்கால் வளைக்கப் பார்க்கிறார்கள்

சியானி



ஆபாசம் மலிந்த ஊடகமாயிற்று; இன்றைய தமிழ்ச் சினிமா!

''கொச்சைத்தனம் மிகுந்த வர்த்தக சூதாடிகளின் கையில் சினிமாக் கலை சிக்கி இருக்கும் வரை; நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம்'' என்றார் லெனின். இதுதான் இன்றைய தமிழ்த் திரைப்படச் சூழலின் அவலம்.

உயரிய கலைப்படங்களின் அல்லது சமுதாயப் படங்களின் அனைத்து ஒழுக்க இயல்புகளையும் கொன்று தின்று கொண்டு வரும் தமிழ் திரைப்படச் சூழல் எதிர்கால சந்ததியினரை வன்முறை, செக்ஸ், சினிமாக்காதல் போதைப்பொருள் பாவனை போன்ற இன்னோரன்ன சமுதாயச் சீரழிவு களுக்கும் காரணமாய் அமைந்து விடுகின்றது.

கடந்த சில வருடங்களாகத் தமிழ்த் திரைப்படம் தொழில்நுட்ப ரீதியான வடக்கே குடிகொண்டிருந்த தனி மாயையை உடைத்து விட்டது என்றாலும்; இசை, ஒலிப்பதிவு, எடிட்டிங், சவுண்ட் அன் ரிக்கார்டிங் போன்ற துறைகளிலும் நாம் அடைந்த வெற்றி காரணமாக தரமான சினிமாவுக்கு தேவையான கதையம்சத்தை இழந்து நிற்கும்

www.tamilarangam.net



பரிதாபம்தான் எமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

மணிரத்தினத்தின் வருகை, ஏ.ஆர்.ரகுமானின் இசை, தயாரிப்பாளர்களின் திறமை, ஸ்ரீராமின் ஒளிப்பதிவு போன்றவை காரணமாக இன்று இந்தியச் சினிமா வியாபாரத்தின் முன்னணியில் நிற்கும் ஒரு சினிமாத் தொழிற்சாலையாக மாறிவிட்டது! வடக்கே ஆட்டம் போட்ட கவர்ச்சிப் புயல்கள் இன்று தமிழ்த் திரையை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். வடக்கே சினிமாவில் குடிகொண்டிருக்கும் மிகைப்படுத்தப் பட்ட சென்டிமென்ட், மேட்டுக் குடித்தனம், வரம்பு மீறிய கவர்ச்சி காட்டல்கள் இப்போது நமது தமிழ்த் திரைப்படத் துறையையும் மூழ்கடித்து விட்டது.

ஷில்பா ஷெட்டி, மனிஷா கெய்ராலா, நக்மா, ஊர்மிளா, தபு என ஆபாசமான கவர்ச்சிப் புயல் களின் படையெடுப்புக்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறன. இவர்களிடமிருந்து தமிழ்ச் சினிமா எதனைத்தான் பெற்றது? இன்றைய இளைஞர்களின் கனவுகளைப் பிடுங்கிக் கொண்ட இக் கவர்ச்சிப் புயல்களின் அங்க அசைவுகளில் தமிழ்த் திரைப்படம் மூச்சுத் திணறுகிறது.

யதார்த்தமான கதையம்சத்தையும் உணர்வு பூர்வமான நடிப்பையும் மறந்து விட்டு தமிழ்த் திரையுலகு வெறும் சினிமா வியாபாரத்தின் பின்னால் போய்க் கொண்டிருக்கின்றது. சிறந்த இயக்குனரான மணிரத்தினம் அவர்கள் தனது அடுத்த தமிழ்த் திரைப்படத்தில் உலக அழகி ஐஸ்வர்யாராயைக் கொண்டு வந்துவிட்டார். ஐஸ்வர்யாராயைக் காட்டிப் பணப்பையை நிறைத்துக் கொள்ள முன்வந்திருக்கும் மணிரத்தினம் போன்ற இயக்குனர்கள் தங்களது சிகரங்களில் இருந்து இறங்கிக் கொண்டிருக் கிறார்களா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

சுந்தரராமசாமி சொல்வது போல் ''தமிழ்த் திரைப்படங்களின் துணுக்குகளை வீட்டின் நடுக் கூடத்தில் அவ்வப்போது பார்க்கிறேன். சின்னத் திரைகளில் இவ்வளவு அற்புதமாக அவைகள் இருந்தால் பெரிய திரைகளில் இன்னும் அற்புத மாகவே இருக்கும். மர்மஸ்தானங்களில் கதாநாயகர்கள் மிதிபடும்போது; பலவீனமான என் ஹிருதயம் படபடக்கிறது. திரை அரங்கில் பார்க்க நேர்ந்தால் மூர்ச்சை போடும் என நினைக்கிறேன். பெண்களின் தொப்புள் மண்டலங்களின் வெண்மையும் மென்மையும் தளதளப்பும் சின்னத்திரையிலேயே இப்படி என்றால் பெரிய திரையில் கடவுளே இளைஞர்கள் எப்படித் தாங்கிக் கொள்கிறார்களோ?

சங்கேதங்களை வெளிப்படுத்த உடலுழைப்பு இந்தளவு தேவைப்படும் நடிக நடிகைகள் உலகில் எந்தப்பகுதியிலும் இல்லை, இந்தளவுக்கு துள்ளிக் குதிப்பவர்கள், ஈருடல் ஒருடலாகப் பின்னிய நிலையில் புற்றரைகளில் உருளுபவர்கள், குலுங்கு பவர்கள், கர்ணம் அடிப்பவர்கள், உடலோடு உடல் தழுவிப் பிரிய, உடல் மீண்டும்தழுவ உடலை முறிப்பவர்கள் உலகில் வேறு எங்கும் இல்லை.

நாம் குறை கூறலாம்! எனக்குக் கூட குறை கூறத் தோன்றிற்று. அப்போதுதான் நமது திரைப்படக் கலைஞர்களும், தணிக்கை குழுவைச் சேர்ந்த கலை விற்பனர்களும் பாத்திரப்படைப்பின் நுட்பம் பற்றி எனக்கு அறிவுறுத்தினார்கள். அருவியில் இவ்வளவு குளித்த நடிகைகள் வேறு எங்கும் இல்லை என்றோ, மழையில் இவ்வளவு நனைந்த நடிகைகள் வேறு எங்கும் இல்லை என்றோ நான் சொல்வதற்கு முன் பாத்திரப் படைப்பின் நுட்பத்தை கவனிக்க வேண்டும்.

காதலர்கள் காதலிகளை அருவிகளுக்கு தொடர்ந் தும் அழைத்துச் சென்றால் அவர்கள் குளிக்காமல் என்ன செய்வார்கள்? வானம் பொத்துக் கொண்டு கொட்ட கதாநாயகிகள் வீடு போய்ச் சேருவது வரையிலும் காத்துக் கொண்டிருப்பதா? வரலா ற்றுக் காலங்களில் பெண்கள் முலைக் கச்சை மட்டும் அணிந்து கொண்டிருந்தால் அதற்கு படத் தயாரிப் பாளர்கள் என்ன செய்ய முடியும்? நம் படக் கலைஞர்கள் போல் பாத்திரப் படைப்பிற்கு முக்கியத்துவம் தருபவர்கள் வேறு எங்குமே இல்லை, யதார்த்தத்தை விட்டு அவர்கள் ஒரு போதும் விலகமாட்டார்கள். அது நிச்சயம்'' என இன்றைய தமிழ்ச் சினிமாவை கிண்டலடிக்கிறார் சுந்தர ராமசாமி அவர்கள்.

சினிமா என்பது வெறும் பணம் பண்ணும் வியாபார

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாய் மாறிப்போய் விட்டநிலையில்; தமிழ்த் திரைப் படங்களின் மீதான நம்பிக்கையை இழப்பதற்கான சாத்தியக்கூறுகள் மீது ஓரளவு நம்பிக்கை தரக் கூடியதான தமிழின் அண்மைய திரைப்படங்களாக தேவர்மகன், மகாநதி, மறுபடியும், கருத்தம்மா, இந்திரா, அவதாரம், மோகமுள், குருதிப்புனல் என்பன ஓரளவு நிமிர்ந்து நிற்கின்றன. இப்படங்கள் தான் உண்மையான தமிழ்ச்சினிமாவின் மூச்சு நின்று போகவில்லை என்பதை நமக்குத் தெரியப்படுத்துகின்றது.

ஞான ராஜசேகரனின் உழைப்பின் காரணமாக, தமிழ்ச்சினிமா இன்னும் மூழ்கிப் போகவில்லை என்ற செய்தி மோகமுள்ளின் ஊடாக சொல்லப் பட்டிருக்கின்றது. தி.ஜானகிராமனின் அதி விமர்சனத்திற்குள்ளான நாவலான ''மோகமுள்'' திரையில் எழுதப்பட்டிருக்கின்றது. நாவலொன்றை திரைப்படமாக்கும் முயற்சியில் இருக்கும் சிரமங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஞான ராஜசேகரனின் மோகமுள் மீதான உழைப்பு துல்லியமாகத் தெரிகிறது.

50களில் தஞ்சாவூரில் வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்தின் கதையின் ஊடே, மனித மனங்களின் வெளிப்பாடுகள், மணவாழ்வெனும் துயரின் பின்னால் இருக்கும் சபிக்கப்பட்ட கொடுமைகள் இதனூடான நரகின் கதவுகள், ஆசாபாசங்களை மட்டுமல்ல உயரிய இலட்சியங்களையும் கொண்ட சிக்கலான வாழ்வின் பரிமாணங்களையும் காட்டி இருக்கின்றது.. ''மோகமுள்'' திரைப்படம்.

1994ம் ஆண்டின் சிறந்த இயக்குனருக்கான ''இந்திரா காந்தி விருது'' ஞான ராஜசேகரனுக்கு ''மோகமுள்'' பெற்றுத் தந்தது. யதார்த்தமான சினிமாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நெஞ்சங்களின் நம்பிக்கையின் முதல்படிதான் இவை.

**வந்தது**
**இருந்து பார்த்தது**
**பிடிக்கவில்லை;**
**திரும்பிப் போய்விட்டது.**

***(ஒரு குழந்தையின் கல்லறையில் எழுதப்பட்ட கவிதை இது)***

வலிந்து இமைபொத்தி,
புலன் அயர்த்தி,
உறங்கிப்போகும் முனைப்பில் தோற்று
கூரையில் காற்றுக்காடும் ஏதோவென்றை
பிரக்ஞையற்று வெறித்திருப்பேன்.

ஆவர்த்தனமொன்றின் வழியே
மேவியுன் நினைவெழுவதும்,
முகஞ்சிவத்துப் புடைத்தே நரம்பெழும்ப
வாய்பொத்தி விம்மி நானழுவதுமே,
விதிப்பென்றாயிற்றின்றின்.

அகன்று விரிந்துள்ள ஆகாயமும்,
ஒரு கோடி வெள்ளியூசிகளும்,
சொட்டு நிலவும்,
தூவானத்திற்காயடைத்துவைத்த
ஜன்னலூடு
தடைப்பட்டுப்போயுள்ளன எனக்கு.

இறுகக் கோர்த்த விரல்கள்
இருபதிலிருந்தென் பத்தையும்
உருவிப்பிடுங்க நான்,
பரஸ்பரம்
ஒருவர் சூட்டை ஒருவர் இழந்தே பிரிய
விளைகையில்
தோளில் தலைகிடத்தி நீ
விம்மி,
விம்மித்தணிய நீருறி
விழி நிறைய,
கலங்கிற்றே அவ்விரவின் இருட்டும்.
அதே,
அதேயிருட்டே இன்றுமிச்
சதுர அறையுள் கவிந்துள்ளது சூழவுமே.

அரைகுறையாடையழகிகளில் விரகித்துக்
காந்த - உள்ளே ஒரு தீ,
பலநூறு பரிவலுகொண்டேயோடும் என்
இரத்தச் சூட்டில்
சொண்டுருகி, வாய் வெந்தே சாகும்
நுளம்புகளும்,
உயிரோடென்தோலுரிக்குமுன்
நினைவுகளும்
நானுமாய்
நகர வாழ்வின் வயது போகிறது.

அங்கு நீ எப்படியோ?

960201 இரவு 11 மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவள் யன்னல் அருகில் நின்று தெருவை நோட்டமிட்டாள். பொழுதுபட்டுக் கொண்டே வந்தது. அவ்ளின் தலை யன்னல் திரைச்சீலையில் சாய்ந்திருந்தது. அழுக்கடைந்த அந்தத் திரைச்சீலையில் இருந்து வந்த முடை நாற்றம் அவள் நாசித்துவாரங்களில் நிறைந்தது. அவளுக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

தெருவில் சன நடமாட்டமே இல்லை. தொங்கல் வீட்டிலிருந்து ஒருவன் மாத்திரம் தனது இருப்பிடத்துக்கு போய்க்கொண்டிருந்தான். 'கொங்கிறீட் பேவ்மென்டால்'' அவன் நடக்கும் சப்பாத்துச்சத்தம் அவளுக்குக் கேட்டது. அது புதிதாகக் கட்டப்பட்டுள்ள செங்கல் வீடுகளுக்கு முன்னால் மெல்ல மெல்லத் தேய்ந்து போனது. அந்த இடத்தில் ஒரு காலத்தில் வயல் வெளி இருந்தது. அங்கேதான் பக்கத்து வீடுகளிலுள்ள சிறுவர்களோடு சேர்ந்து மாலை நேரங்களில் விளையாடியிருக்கிறாள். 'பல் பாஸ்டி'லிருந்து வந்த ஒருவன் அந்த நிலத்தை விலைக்கு வாங்கி வீடுகளைக் கட்டினான். அவைகள் அவர்களது வீடுகளைப் போல் களையிழந்து போன சிறிய வீடுகளல்ல. பளபளப்பான பெரிய வீடுகள். தெருவில் உள்ள சிறுவர்களெல்லாம் அந்த வயல் வெளியில்தான் கூடுவார்கள். டேவியன், அவள், அவளுடைய சகோதரர்கள், வோல்டர், டன் வீட்டுச் சிறுவர்கள், சின்ன நொண்டி 'கேவ்' எல்லோரும் அங்கே கூடுவார்கள். 'எர்னெஸ்' விளையாட வரமாட்டான். அவன் அப்போதே பெரிய ஆளாக வளர்ந்து விட்டிருந்தான். அடிக்கடி அவளுடைய தகப்பன் பிரம்புடன் அவர்களைத் தேடிக் கொண்டு வருவார். அவர் வருகையை அறிவிக்கவென்றே சின்ன நொண்டி 'கேவை' விட்டு வைத்திருப்பார்கள். தூரத்தே அவர் வருவது தென்பட்டவுடன் அவன் ஒரு சத்தம் வைப்பான். அப்போது அவர்கள் சற்று சந்தோஷமாக இருந்ததாகவே பட்டது அவளுக்கு. அவளுடைய தகப்பன் அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. அப்போது தாயும் உயிருடன் இருந்தாள். அதெல்லாம் ஒருகாலம். அவள், அவளின் சகோதரர்கள் எல்லாம் பெரியவர்களாகி விட்டனர். தாய் செத்துப் போய் விட்டாள். ரிஸ்ஸிடன் கூட செத்துப் போய் விட்டான்.



வோட்டர் குடும்பத்தினர் திரும்பவும் இங்கிலாந்துக்குச் சென்று விட்டனர். எல்லாம் மாறி விட்டது. இப்பொழுது அவளும் எல்லாரையும் போல் வீட்டை விட்டுப் போகப் போகிறாள்.

www.tamilarangam.net



வீடு, அவள் அந்த அறையை ஒரு தரம் நோட்டமிட்டாள். ஒவ்வொரு வாரமும் தூசுதட்டி வருடக்கணக்காக பழகிப்போன பொருட்கள் அவைகளை ஒரு தரம் நோட்டமிட்டாள். எங்கிருந்துதான் இவ்வளவு தூசுகளும் வந்து அடைகிறதோ என்று சலித்துக் கொண்டாள். ஒரு வேளை இவைகளை இனிப் பார்க்க முடியாமல் போகலாம். அவைகளைப் பங்கிட வேண்டிய தேவையும் இருக்காது. அவள் வீட்டை விட்டுப் போக சம்மதித்து விட்டாள். அது சரிதானா? இக் கேள்வியில் இரு பக்கங்களையும் எடை போட்டுப் பார்க்க முனைந்தாள். வீட்டில் அவளுக்கு ஒரு கவளம் உணவும் தலைசாய்க்க ஒரு மூலையும் கிட்டும்தான். பக்கத்தவர்க்கெல்லாம் அவளை சிறு வயதிலிருந்தே தெரியும். வேலைத் தலத்திலும் வீட்டிலும் அவள் கடுமையாக உழைத்தாள். ஆயினும் அவள் அவனுடன் ஓடி விட்டாள் என்றாள் ஸ்டோர்ஸில் உள்ளவர்கள் என்ன சொல்வார்கள். ஒருவேளை அவளை மடைச்சி என்று அவர்கள் சொல்லலாம். அவளின் வேலை விளம்பரமொன்றினால் நிரப்பப்படும். மிஸ் ''காவன்'' நிச்சயம் சந்தோஷப்படுவாள். அவள் எப்பவும் நச்சரித்துக் கொண்டிருப்பாள். மற்றவர்களுக்கும் கேட்கக் கூடியதாகக் குத்தல் பேச்சு வேறு.

ஆனால் வெகுதூரத்தில், கண்காணாத அந்தக் காட்டில். வரப்போகும் அந்தப் புதிய வீட்டில் இந்தத் தொல்லையெல்லாம் அவளுக்கு இருக்காது. அவள், ஈவ்லின் திருமணமாகி இருப்பாள். சனங்கள் அவளை மதிப்போடு நடத்துவார்கள். அவளது தாயாருக்கு கிட்டாத அந்தப் பேறு அவளுக்குக் கிட்டும். இப்போது அவளுக்குப் பத்தொன்பது வயதுக்கு மேலாகி விட்டது. தகப்பன் செய்யும் இம்சைகளை நினைக்க மனம் நடுங்கியது. சிலசமயங்களில் உடல் பதைபதைப்பதாக இருப்பது இதனால்தானே என்று நினைத்தாள். ஊரினையும், ஏர்னெஸ்டையும் நடத்தியது போல் அவர் அவளை நடத்தியதில்லை. ஏனெனில் அவள் ஒரு பெண்பிள்ளை. ஆனாலும் அவளுக்கு வயது வந்துவிட்ட பின்னர் செத்துப் போன தாய்க்காக விட்டு வைப்பதாகப் பயமுறுத்துவாரே தவிர கையோங்கியதில்லை. அவளுக்காக ஒருவருமில்லை. ஏர்னெஸ்ட் செத்துப் போய்விட்டான். ஹரி சேர்ச் அலங்காரம் செய்யும் தொழில் செய்து கொண்டு எங்கே ஒரு மூலையில் இருக்கிறான்.

சனிக்கிழமை இரவுகள் வீட்டில் சதா சண்டையும் சச்சரவுமாகவே கழியும். இது மெல்லவாக அவளை உருக்குலைத்து வந்தது. அவள் தனது வாரத்து உழைப்பான ஏழு சிலிங்கைக் கொண்டு வருவாள். ஹாரியும் தனக்கு முடிந்தை அனுப்பி வைப்பான். பிரச்சினை வருவதே குடும்பச் செலவுக்கான மீதியை ஈடுகட்ட தகப்பனிடம் காசுகேட்கும் போதுதான். அவள் காசை வீணாக செலவழிப்பதாக அவர் ஏசுவார். தான் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதை கண்டபடி தெருவில் வீசியெறியத் தரமாட்டேன் என்பார். சனிக்கிழமை இரவுகளில் மிக மோசமாக குடித்துமிருப்பார். கடைசியில் நாளை, ஞாயிற்றுக்கிழமை சாப்பாட்டுக்கு என்ன சமைக்க போகிறாய் என்று கேட்டு சில தாள்களை விட்டெறிவார். கறுத்த தோல் மணிபர்ஸை பற்றிப் பிடித்த வண்ணம் சனகூட்டத்துள் முண்டி அடித்துக் கொண்டு சந்தைக்கு ஓடுவாள். குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்கு அவள் படாதபாடுபட்டாள். மேலும் அவளுக்கிளைய சிறிசுகள் இருவரையும் பராமரித்து உணவூட்டி, ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி வைக்கவும் வேண்டியிருந்தது. உண்மையில் இது ஒரு கடினமான வேலை கடினமான வாழ்க்கை ஆயினும் அவள் இப்போது இதையிட்டு விலகிப் போக இருக்கிறாள்.

அவள் பிராங்கோடு வாழப் போவதைப்பற்றி எண்ணத் தொடங்கினாள். பிராங் அன்பானவன், கள்ளம் கபடமில்லாதவன், அழகானவன். பியுனோஸ் அய்ராஸீக்கு இன்று புறப்படும் இரவு படகில் அவனோடு செல்ல இருக்கிறாள். அங்கே அவனுக்கு மனைவியாக அவனுடன் வாழ்வதற்கு; அவனுக்கு சொந்தமாக வீடொன்றும் இருக்கிறது. அவனை முதல் முதலாக சந்தித்தது. அவளுக்கு

www.tamilarangam.net



ஞாபகம் வந்தது. அவன் பிரதான வீதியோரமாக உள்ள வீடொன்றில் வாடகைக்கு குடியிருந்தான்.

அந்த வழியாகத்தான் அவள் போய் வருவாள். கேற்றடியில் நின்று கூர்நுனி தொப்பியை பலமாக அமத்திக் கொண்டிருந்தான். அப்போது தலைமயிர் கற்றைகள் அவனின் வெண்கல நிற முகத்தில் வந்து விழுந்தன. பின்னர் எப்படியோ அவர்கள் ஆளை ஆள் அறிய வந்தனர். அவன் ஒவ்வொரு மாலையும் ஸ்ரோரின் வெளிப்புறத்தில் அவளைச் சந்திப்பான். அவளின் வீட்டுக்கும் கூட போய் வந்திருக்கிறான். ஒருநாள் ''பொகொ கேர்ள்'' பார்க்க அவளைக் கூட்டிக் கொண்டு போனான். தியேட்டரில் ஒதுக்கமான இடமொன்றை பார்த்து, அங்கே போயிருந்தனர். அப்படி அவனோடு அமர்ந்திருந்தது அவளுக்கு மிகவும் பரவசமாக இருந்தது. அவர்கள் காதலிக்கிறார்கள் என்று சனங்களுக்குத் தெரியும். இசையென்றால் அவனுக்குப் பைத்தியம், ஓரளவு பாடவும் தெரியும். ஒரு மாலுமியைக் காதலித்த இளம் பெண் ஒருத்தியைப் பற்றியதான ஒரு பாடலை அவன் பாடுவதைக் கேட்டு உருகிப் பரவசமாகிப் போவாள். குதூகலம் கொப்பளிக்க அவனைப் 'பொப்பன்' என்று அழைப்பாள். எல்லாவற்றுக்கும் மேலாக தனக்கென்று ஒருவன் இருக்கிறான் என்பதே அவளுக்கு பெருமிதமாக இருந்தது. அவளும் அவனை விரும்பத் தொடங்கினாள். அவன் தூரத்து நாடுகள் பற்றி கதைகதையாக கூறுவான். முதன்முதலாக கனடாவுக்கு போய் வந்த கப்பலொன்றில் 'டெக்போயா' சேர்ந்தது. பின்னர் வேலை செய்த கப்பல்கள், செய்து வந்த பலவகை வேலைகள், என்பவற்றை எல்லாம் விபரமாக அவளிடம் சொல்வான். முதலில் லீவே இல்லாமல் கப்பலில் வேலை செய்து கஷ்டப்பட்டதையும் எப்படியோ லீவு கிடைத்து ஊருக்கு போய் வந்ததையும் விபரிப்பான். அவளது தகப்பனுக்கம் அவர்களது காதல் விவகாரம் தெரியவந்தது. அவனோடு இனி உனக்கு எந்தக் கதையும் இல்லை என்று ஒரே அடியாக மறுத்து விட்டார். கப்பல்கார கழிசடைகளைப் பற்றி எனக்கு நல்லா தெரியும் என்று கத்தினார். ஒருநாள் அவர் பிராங்குடன் சண்டைக்கு போய்விட்டார். இதன் பிறகு அவன் அவளை இரகசியமாகவே சந்தித்தான்.

இப்போது நன்கு இருட்டி விட்டது. அவளது இடுப்பில் இரண்டு வெள்ளைக் காகிதங்கள் இருந்தன. ஒன்று சகோதரன் ஹரிக்கு, மற்றது தகப்பனுக்கு; ஏர்னெஸ்வ்டோவிடம் தான் அவளுக்கு இரக்கம் அதிகம். எனினும் ஹாரியையும் அவள் நேசித்தாள். கொஞ்சக் காலமாக தகப்பன் முதுமையடைந்து வருவதை அவள் அவதானித்திருந்தாள். அவரை சில வேளைகளில் அவள் இழந்து போகலாம். எப்போதாவது சில சமயங்களில் அவர் இதமாக இருப்பதுண்டு. அவர் அவளுக்காக பேய்க் கதைகளை வாசித்துக் காட்டியது; இறைச்சியை நெருப்பில் வாட்டிக் கொடுத்தது எல்லாம் கண காலமாகி விடவில்லை. ஒருநாள் அவர் அவர்களை ஹேவத் என்னுமிடத்தில் உள்ள மலைக்கு பிக்னிக்காக கூட்டிச் சென்றுமிருக்கின்றார். அப்போது அவளது தாயும் உயிருடன் இருந்தாள். அவர்களுக்கு சிரிப்பு மூட்டுவதற்காக அவர் தாயின் கொண்டை அலங்காரத்தை தட்டிவிட்டது கூட அவளுக்கு நன்றாக ஞாபகத்துக்கு வருகிறது.

நேரம் போய்க் கொண்டிருந்தது. அவளோ தொடர்ந்தும் அந்த யன்னலில் தலையை சாய்த்துக் கொண்டிருந்தபடி அழுக்கு யன்னல் திரைச்சீலையில் இருந்துவரும் நாற்றத்தை சுவாசித்துக் கொண்டுமே இருந்தாள். எங்கே தெருவில் நாடோடி வாத்தியக்காரன் 'ஓர்கன்' வாசிப்பது கேட்டது. சற்று வினோதமாக இருந்த போதிலும் அது அவளது தாயின் நோய்ப்படுக்கையின் கடைசி இரவை ஞாபகப்படுத்தியது. கடைசி வரையும் குடும்பத்தை காப்பாற்றுவதாக தாய்க்கு கொடுத்த வாக்குறுதியை நினைவு கூர்ந்தாள்.

மண்டபத்துக்கு அடுத்த பக்கமாயிருந்த அந்த இருண்ட அறையின் பக்கமாக வந்தாள். இத்தாலி நாட்டின் துயர வாழ்க்கையின் சோகத்தை அந்த வாத்தியக்காரன் அறைக்கு வெளியே நின்று காற்றில் குழைத்து ஊதிக்

www.tamilarangam.net



கொண்டிருந்தான். அவனுக்கு ஆறு பென்ஸ் கொடுத்து அப்பால் போகச் சொன்னாள்.

''நாசமாய்ப்போன இத்தாலியன்கள் எல்லாத்துக்கும் இங்கே தான் வந்து மொய்க்கிறான்கள்'' என்று தகப்பன் ஏசுவது கேட்டது. வழக்கமான பொறுப்புக்களாலும் தியாகங்களாலும் நொடிந்து, கடைசியில் சித்தப் பிரமைக்கு உள்ளாகி அற்பாயுளில் மறைந்து போன தனது தாயாரை அவள் எண்ணிப் பார்த்தாள். பிரக்ஞை அற்ற நிலையில் கடைசியாக தாயார் ஒரே வார்த்தையை திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருப்பதை நினைக்க அவளுடைய தேகமெல்லாம் நடுங்கியது.

திடீரென தோற்றிய பய பிராந்தியில் அவள் எழுந்து நின்றாள். தப்பித்துக் கொள்ள வேண்டும். அவள் கட்டாயம் தப்பிக்கத்தான் வேண்டும். ''பிராங்'' அவளைக் காப்பாற்றுவான். அவளுக்கு வாழ்வளிப்பான். அவளை உயிர்க்குயிராய் நேசிப்பான். அவள் வாழ்வை வாழ விரும்பினாள். ஏன் அவள் சந்தோஷமில்லாமல் இருக்க வேண்டும்? அவளுக்கு சந்தோஷமாக வாழ உரிமை இருக்கின்றது. பிராங் அவளைத் தனது கரங்களில் ஏந்தி மார்போடு அணைத்துக் கொள்வான். என்றும் அவளைக் காப்பான்.

''நோத்வோல்'' ஸ்டேசனில் அலைமோதும் சனத்திடையே அவள் நின்றாள். அவள் கையைப் பற்றிய வண்ணம் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தான். திரும்பத் திரும்ப அவர்களின் பயணம் பற்றியும் சொல்வது அவள் காதில் விழுகின்றது. அந்த ஸ்ரேசன் பிரவுண் நிற மூட்டை முடிச்சுகளோடு நின்றிருந்த சிப்பாய்களால் நிரம்பி வழிந்தது. மண்டபத்தில் அகன்ற கதவின் வழியாக கப்பல் துறையில் நின்றிருந்த படகின் கறுத்த பாய்மரம் தெரிந்தது. படகின் பக்கவாட்டிலுள்ள துவாரங்களின் வழியாக வெளிச்சம் ஒளி வீசியது. அவள் ஒன்றுமே பேசாது நின்றாள். மன சஞ்சலத்தால் முகமெல்லாம் வெளிறி விறைத்து போய்விட்டதாக தோன்றியது. தனது கடமை என்ன என்று உணர்த்துமாறும் தனக்கு ஒரு வழியைக் காட்டி அதன் மீது தன்னை இட்டு செல்லுமாறும் கடவுளை வேண்டினாள். இடையே சோகம் கலந்த நீண்ட விசில் சத்தம் படகிலிருந்து வந்தது. அவள் போனால், பியுனஸ் அய்ரஸ் செல்லும் படகில் நாளை அவனோடு பயணம் செய்து கொண்டிருப்பாள். அவர்களின் பயணம் ஏற்கெனவே 'புக்' செய்யப்பட்டுவிட்டது. இந்த அலுவல்களெல்லாம் முடிந்த பிறகு இதிலிருந்து அவள் விலத்திக் கொள்ள முடியுமா? பொங்கி வந்த துயரத்தால் வாந்தி எடுக்க வந்தது. உதடுகளை இறுக்கி மூடிக் கொண்டு பரபரப்புடன் மௌனமாக மன்றாடினாள்.

இதயத்தில் ஒங்கி அடிப்பது போல் மணி ஒலித்தது. அவன் அவள் கையைப் பற்றுவதை உணர்ந்தாள். ''வா''

இல்லை! இல்லை! இல்லை! இது சாத்தியமே இல்லை. திடீர் ஆவேசத்தில் இரும்புக் கிராதியை கைகள் இறுக பற்றிக் கொள்கின்றன. தாங்க முடியாத வேதனையால் பீறிட்ட அழுகையொலி கடலிரைச்சலில் கலந்தது.

அவன் தடைக்கு அப்பால் பாய்ந்து அவளை வரும்படி கூப்பிட்டான்.

''ஈவ்லின்! ஈவ்லின்''

படகை நோக்கி ஓடிக்கொண்ட அவளை கூப்பிட்டான். அப்படியே கூப்பிட்டுக் கொண்டே ஓடினான்.

அவளோ திக்பிரமை பிடித்தவள் போன்று விறைத்த முகத்துடன் அவனை நோக்கினாள்.

அதில் அன்போ, அறிமுகமோ அல்லது ஒரு வழியனுப்புதலுக்கான சாயலோ கூட அவனுக்கு தென்படவில்லை.

**கலைஞன் என்பவன் ஒரு விசேசமான மனிதன் என்பதைத்தவிர ஒவ்வொரு மனிதனும் ஒரு விசேசமான கலைஞனாக இருக்கமுடியாது!**

**ஆனந்தக் குமாரசாமி**

www.tamilarangam.net







# இனவாத அழுத்தத்தில் மூழ்கிப்போன சமாதானத் தீர்வு

கருங்கொடியான்

"எலிகளைக் கொல்ல மனமில்லை. அதனால் பூனை வளர்க்கிறேன்'' இன்றைய நிலைமையைச் சொல்வதற்கு இதைவிட வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வில்; சிறுபான்மை தமிழ், முஸ்லீம் மக்களுக்கான தீர்வென்பது சிங்கள மக்களின் பிச்சை போடும் ஒரு காரியமன்றி வேறு ஒன்றுமில்லை என்பது பண்டாரநாயக்காவிலிருந்து சந்திரிக்கா வரை நிரூபணமான உண்மையாயிற்று. நாங்கள் கொடுப்பதை இவர்கள் பெற்றுக் கொள்வதை விடுத்து வேறு எதனையும் கேட்க முடியாது என்பது சிங்கள அரசியல் தலைமைகளின் வெளிப்பாடாக இருக்கிறது. சமாதானத்திற்கான குறைந்த பட்ச எண்ணத்தைக் கூட இன்றைய பேரினவாத அழுத்தங்கள் எம்கண்முன்னால் கொடூரமாக சிதைத்துவிட்டதை நாம் காண்கிறோம்.

சிங்கள அரசியல் வாதிகள் தங்களின் நலன்களுக்காகவேண்டி, நீண்ட காலமாய் புரையோடிப் போன இனப்பிரச்சினையை அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் லாபம் தரும் வியாபாரமாய் கருதிக்கொண்டிருக்கிறார்கள். பௌத்த மேலாதிக்கவாதிகள் குருட்டு ஆந்தைகள் போல்

www.tamilarangam.net



இன்னும் இன்னும் தங்களின் விட்டுக்கொடாத பௌத்த மேலாதிக்க வாதத்தின் ஊடாக தமிழர் களையும் முஸ்லீம்களையும் வெறும் கருவேப் பிலைகளாகவே பார்க்கிறார்கள். சிங்கள புத்தி ஜீவிகளோ இனப்பிரச்சினைக்கான தோற்றத்தை எந்தளவு நியாயமாக உணர்ந்து கொண்டு, சிறுபான்மையினங்களான தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமான உரிமைகளுக்காக குரல் எழுப்புவார்கள் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

இந்த நிலைமையில், இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினர் தங்களுடைய அனைத்து உரிமைகளையும் பெற்று சமத்துவமாகவும், சுதந்திரமாகவும் வாழ என்ன வழி என்பதே இன்று சிறுபான்மை மக்கள் மத்தியில் உள்ள பாரிய கேள்வி ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜே.ஆர்.ஜெய வர்த்தன யுகம், பிரேமதாச யுகம், டி.பீ,விஜேதுங்க யுகம் என சிறுபான்மை இனங்களுக்கான சமத்துவ மற்ற இன உணர்வு மலிந்த சூழலை 17 வருட காலமாக நீட்டி வந்தனர். 17 வருடங்களின் பின் சமாதானத்தின் தேவதையாக தன்னைக் காட்டிக் கொண்ட சந்திரிகாவின் யுகம் ஐக்கிய தேசியக் கட்சியின் சமத்துவமற்ற இன உணர்வு மலிந்த யுகத்தை விடவும் எதிலும் குறைந்ததில்லை என்பது இப்போது வெள்ளிடை மலை போல் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் முஸ்லீம் மக்களுடைய பிரச்சினைகளை பௌத்த பிக்குகளுடன் பேசித் தீர்க்கும் அரசிய லின் உண்மை நிலை அம்பலத்திற்கு வந்த பின் னும் அரசியல் வாதிகளின் கையாலாகாத் தனங் களின் வெளிப்பாடு; இன்னும் அரசியல் வாதிகளின் மேல் பிரச்சினையைத் தீர்க்க உதவுவார் கள் என்று நம்பி க்கை கொள்வதற் கான இறுதி வாய்ப் பையும் தகர்த்து விட்டிருக்கிறது.

பௌத்த மதம் நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக தன்னை ஸ்தாபித்து நிலை கொண்டிருப்பதை இன்றைய, கடந்தகால போக்குகளின் ஊடே நாம் காண்கிறோம். அரசியல் அரங்கில் பௌத்த ஆதிக்கமானது தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இந்த நாட்டின் பேச்சுவார்த்தை மேசையின் ஊடே ஒரு சிறு சமத்துவத்தைக் கூட பெற்றுத்தருமா என காலத்தைக் கடத்திக் காத்திக்கொண்டிருப்பவர்கள் வரலாற்றின் ஊடே பலத்த தோல்விக்காக காத்துக்கொண்டிருப்பவர்கள்தான் என அழுத்தம் திருத்தமாக கூறமுடியும்.

கடந்த வருடம் ஆகஸ்ட் 8ம் திகதி சந்திரிகாவால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனையின் மீது பௌத்த மேலாதிக்க சக்திகள் காட்டிய தீவிர எதிர்ப்பின் காரணமாக அவ்யோசனைகளில் கூறப்பட்டிருந்த ஆகக்குறைந்த ஏற்பாடுகளைக் கூட மறுதலித்துவிட்டு, மீண்டும் சட்டநகல் வடிவ த்தில் கொண்டு வரப்பட்ட ஆவணத்தில் ஒன்று மில்லாத ஒரு காகிதத் தீர்வை முன்வைக்க வேண்டிய நிலைக்கு சந்திரிகா தள்ளப்பட்டு விட்டார்.

பொதுஜன முன்னணி அரசு எங்கே தீர்வை முன் வைக்கப்போகிறது என காத்துக்கொண்டிருந்த ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ''இத்தீர்வானது சிங்கள மக்களை கல்லறைக்கு அழைத்துச் செல்லும் தீர்வு'' என சிங்கள மக்கள் மத்தியில் இப்போது தீவிர பிரச்சாரத்தில் இறங்கி இருக்கிறது. இழந்து விட்ட அதிகாரத்தை நாளை கைப்பற்றுவதற்கு இத்தீர்வை எதிர்க்கும் ஒரு வாய்ப்பை ஏன் நாம் இழந்துவிட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் குறியாகும். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள் வதற்காக மாத்திரம் தேர்தல் மேடை களில் தமிழ் மக்கள் மீதும் முஸ்லீம் மக் கள் மீதும் அன்பும் பரிவும், பாசமும்

> தமிழ் முஸ்லீம் மக்களுடைய பிரச்சினைகளை பௌத்த பிக்குகளுடன் பேசித் தீர்க்கும் அரசியலின் உண்மை நிலை அம்பலத்திற்கு வந்த பின்னும் அரசியல் வாதிகளின் கையாலாகாத் தனங்களின் வெளிப்பாடு; இன்னும் அரசியல்வாதிகளின் மேல் பிரச்சினையைத் தீர்க்க உதவுவார்கள் என்று நம்பிக்கை கொள்வதற்கான இறுதி வாய்ப்பையும் தகர்த்துவிட்டிருக்கிறது.

www.tamilarangam.net



பொங்கிவர நீலிக்கண்ணீர் வடிப்பதும் பின்னர் சிறுபான்மை மக்களை ஏமாற்றி அதிகாரத்திற்கு வந்ததும் பிக்குகளின் காவி உடைக்குப் பின்னால் தங்களை மறைத்துக்கொள்வதையும் சிறுபான்மையினர் இந்த நாட்டில் நாற்பது வருடங்களுக்கு மேலாக கண்டு வந்த உண்மையாகும்.

இந்த நாட்டில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் பாரம்பரிய பிரதேசங்களை மறுதலித்து, அம்மக்களின் இயல்பு வாழ்க்கையின் மீது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் போக்கானது ஆயிரமாயிரம் உயிர் இழப்புக்களை சந்தித்தும், இரத்த ஆறுகளில் மூழ்கியும் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டும் இன்னும் மாறவில்லை என்பது இனியும் எதிர்காலத்தில் மாறிவிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பை இல்லாமல் ஆக்கி விட்டது.

தொடர்ந்து வரும் இந்த மனோபாவம் காரணமாக தமிழர்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டின் தேசியத்துடன் தங்களை சங்கமமாக்கிக் கொள்ளும் பல எத்தனங்களுக்கு மத்தியில் தோல்வியைத் தழுவியவர்களாகவே காணப்படுகின்றனர். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இந்த நாட்டில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட உறுதிப்படுத்தப்படும் ஒரு ஏற்பாடே இத் தேசியத்துடன் தமிழர்களையும் முஸ்லிம்களையும் உள்வாங்கும் ஒரு ஏற்பாடாக அமையும். இந்நிலை தோன்றாதவிடத்து தமிழர்களும், முஸ்லிம்களும் இத் தேசியத்திலிருந்து தங்களது இருப்புக்களை முற்றாக விலக்கிக் கொள்வது காலப்போக்கில் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் முன்வைக்கப்பட்ட போது ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கண்டிக்கு இனவாத யாத்திரை மேற்கொண்டதையும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததையும், இன்று கூட்டாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் தாங்கள்தான் சிங்கள மக்களின் இரட்சகர்கள் எனக் காட்டிக் கொள்வதற்காக சிறுபான்மை மக்களுக்கு அதிகாரங்களை வழங்கும் விடயத்தில் ஒன்றாக அணி திரண்டிருப்பதை நாம் காண்கின்றோம்.

இப்போது முன்வைக்கப்பட்டுள்ள இத் தீர்வு யோசனை பாராளுமன்ற தெரிவுக்குழுவால் ஆலோசிக்கப்பட்டு பின் பாராளுமன்றத்தினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட்டு நாடு தழுவிய மக்கள் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டால் மாத்திரமே, அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்படும். இதுவொரு சாத்தியப்படாத ஏமாற்று நாடகமன்றி வேறில்லை.

இன்றைய நிலையில், பௌத்த மேலாதிக்கவாதிகள் யாரும் இத்தீர்வை ஏற்றுக் கொள்ளவில்லை. சிறுபான்மை மக்களுக்கு இத் தீர்வு யோசனைகளில் மிகவும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளதாக (ஒன்றுமேயில்லை) குற்றம் சாட்டுகின்றனர். அனைத்து பௌத்த மகாநாயக்க பீடங்களும் இத்தீர்வை முற்றுமுழுதாக எதிர்க்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏனைய சிங்கள இனவாதக் கட்சியினரும் இத்தீர்வை எதிர்க்கின்றனர். தீர்வு யோசனையை முன்வைத்த பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட தலைவர்கள் கூட இத் தீர்வை வெளிப்படையாக எதிர்க்கின்றனர். இந்தநிலையில் இத்தெரிவிக்குழுவின் ஊடாக பாராளுமன்ற பேச்சுவார்த்தைகளின் ஊடாக தமிழர்களும், முஸ்லிம்களும் எப்படி தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சூழல் தோன்ற முடியும்?


இந்த நாட்டின் சிறுபான்மையினரைப் பொறுத்த வரை -

பண்டாரநாயக்க, ஜேஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச. டி.பி.விஜேதுங்க போன்றவர்களைப் போன்றுதான் இன்றைய சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் என்பது தெரிந்து விட்டது.

www.tamilarangam.net



**கண்ணயாழியிலிருந்து மலையாளக் கவிதையொன்று**




அதிர்ஷ்டம் உனை கைவிட்டதா, இல்லை
அதிர்ஷ்டத்தை நீ ஒதுக்கினாயா?
முன்பு நடந்த கதையிதை என் நித்திரையில்
கொண்டு வந்து எனை ஏன் எழுப்பினாய்?

அரண்மனை வாசல் அடைத்ததன்றோ; பின்
அகத்தளத்தில் நீ எங்ஙனம் வந்தாய்?
வெட்டி முறித்து பதம் செய்து; கொணர்ந்து
வைத்த பனையோலைக் கட்டுக்களில்
சுற்றிப் பிணைந்து நிற்பதற்கு- ஒரு
புனை கதை போல் நீ இன்னமும்?

நிஜமா கேட்டவை தூரத்தொலைவில்
பெயர் பெற்ற மதுரைத் திருநகரில்
கொழுந்து விட்டெரிந்த காதல் கதையின்
துயரத் துன்பியல் நினைவோ நீ?

அனைத்தையும் இழந்தபின்னரும் - நீ அதில்
பட்டு விடாமல் சிலம்பொலியாய்
புதிய நகரில் தேவி பேரருளாய்
இப்போதும் நீறுபூத்து துடிப்பதன்றோ?

# ஆல்பெர் காம்யூ பற்றிய சில குறிப்புகள்

## அ.ஜெகநாதன்

“ஆல்பெர் காம்யூ”

அவரின் 46வது வயதில் இறந்த பொழுது; செய்தியின் அதிர்ச்சியுடன் இங்கொரு எழுத்தாளன் அவனுடைய பணி பாதி சாதிக்கப்பட்டிருக்கும் போதே; அவனுடைய சிருஷ்டியின் மத்திம காலத்தில் துண்டிக்கப்பட்டான் என்கிற உணர்வு எழுவது இயல்பு.

இனி வெளியாவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிந்தபின்; மீண்டும் அவரின் படைப்புகளை படிக்கும்போது; குறிப்பிடத்தக்க வகையில் முற்றுப்பெற்ற சீராக்கப்பட்ட பரிபூரணமான ஒரு காரியத்தைப் பற்றிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வித்தியாசமான எண்ணப்பதிவு ஏற்படுகிறது.

***''மரணம் வாழ்க்கைக்கும் அன்பிற்கும் ஒரு வடிவத்தை அளித்து, இரண்டையும் உருமாற்றி; விதி அமைப்பாய் மாற்றுகிறது'' என்று ஆல்பெர் காம்யூ தனது குறிப்பேடுகளில் சொல்கிறார். ஆல்பெர் காம்யூவின் வாழ்க்கை கவனத்திற்குரிய வகையில் இன்னல்கள் மீதான ஒரு மாபெரிய வெற்றி என்று சொல்ல வேண்டும்!***

காம்யூவின் வாழ்நிலை அனுபவங்கள் அவரது சிந்தனையையும் கலையையும் முழுமைப்படுத்திய உண்மைக்கு அப்பால்; விமர்சனங்கள் தம் சாத்தியப்பாடுகளை இழந்து நிற்கிறது எனக் கூற முடியும்! இருபதாம் நூற்றாண்டு மனிதனின் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தின் எதிர்விளைவே ''காம்யூ'' என்ற மனிதனும் அவனது கலையும்.

தனது சூழலின் இறுக்கத்தில் வாழ்வு என்பதன் மகோன்னதத்தை அதன் சிறுமையிலிருந்து மீட்கப் புறப்பட்ட காம்யூ; பொய்மையும் கயமையும் மலிந்த எல்லாச் சூழல்களிலும் பேசப்பட வேண்டியவன் தான். இன்றைய தமிழ்ச் சூழல் புண்ணியாத்மாக்களின் புகலிடம் என்று யாரும் கருதிவிட முடியவில்லை!

எனவே தமிழ் இலக்கிய; ஏன் சமுதாயச் சூழலுக்குக் கூட காம்யூவைப் பற்றிப் பேசுவது Relevent ஆகத்தான் உள்ளது. காம்யூ அல்ஜீரியாவில் பிறந்ததும் அவரது சிந்தனை பிரெஞ்சுக் கல்வியாலும் பல ஐரோப்பிய இலக்கிய தத்துவ விசாரங்களாலும் தாக்குண்டது என்ற உண்மையும் அவனை தமிழ் உலகுக்கு அந்நியப்படுத்தி விட முடியும் என்று நம்பமுடியவில்லை. இதை நம்புகின்ற இலக்கியப் Partanகள் பொதுவான மானுட அவலமே காம்யூவை உக்கிரமாக பாதித்தது என்பதையேனும் நம்ப முயல வேண்டும்.

காம்யூ தமிழுக்கு புதியவன் ஆயினும்;

மனிதத்திற்கும் அதன் உயிர்த்துடிப்புக்கும் மிகவும் பரிச்சயமானவன். வாழ்வை அதன் ஆனந்த பரவசத்தை, சோகத்தை, அவலத்தை. அபத்தத்தை எதிர்கொண்டு அவை வழங்குகின்ற ஜீவித மதிப்புக்களை ஆராயும்போது அவனுக்கு படைப்பு சாத்தியமாகின்றது. நல்ல இலக்கியம் என்கிற யாவற்றின் சாத்தியப்பாடுகளும் இப்படித்தான் நிகழ முடிகிறது. இந்த நல்ல இலக்கியங்கள் யாவற்றின் பின்னும்; இந்த நூற்றாண்டின் மனித கௌரவங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. மானிட வாழ்வு குறித்த விசாலமான நோக்குடைய எல்லா இலக்கியங்களும் எல்லா சமூகங்களிலும் பேசப்படலாம். பேசப்பட வேண்டும்! இதற்கு ''ஆல்பெர் காம்யூ'' ஒரு விதிவிலக்கல்ல.

அரசியல்; இலக்கிய ஈடுபாடோ தீவிரமோ அற்ற தமிழ் புத்திஜீவிகள் காம்யூவைப் பற்றி இலேசாகப் பேசுவது அபத்தம்தான்! கலை இலக்கியம் என்பவற்றை மட்டும் பூஜித்து; அவை என்றுமே சார்ந்து நிற்கிற மானிட யதார்த்தங்களை சௌகரியமாய் மறந்து விடுகிற நமது புத்திஜீவிகளுக்கு நிச்சயமாய் காம்யூ தேவை என்றே கூறமுடியும். ''காம்யூ'' இந்த நூற்றாண்டின் நிச்சயமானதொரு பிரதிநிதி என ''சார்த்'' கூறியதை ஒதுக்கிவிட முடியவில்லை. ''கம்யூவின் வாழ்வும் கலையும் புரிந்து கொள்ளப்படும் போது அவரது அரசியல் நிலைப்பாடுகள் முழுமையாக வாழத் தலைப்பட்ட ஒரு கலைஞனின் ஸ்திதியே எனக் கொள்ளலாம்.

''வெளியேற்றமும் ராஜ்ஜியமும்'' என்ற ''காம்யூ''வின் கடைசித்

> அறிவின் எளியமொழி
> சாத்தியமில்லாமல் போகும் அளவுக்கு
> வளரும் ஒரு வெறித்தனத்தில்
> வன்முறையே வன்முறைக்குப்
> பதிலாக இருக்கும் சூழ்நிலையில்;
> நாம் தினசரி படிப்பதைப் போல, ஒரு
> அறிவுவாதியின் பங்கு; குறிப்பிட்ட
> தொலைவில் இருந்து கொண்டு
> வன்முறைச் செயல்களில் ஒன்றைக்
> கண்டனம் செய்து மற்றொன்றை
> மன்னித்தலாக இருக்க முடியாது!
>
> -- காம்யூ

www.tamilarangam.net




தொகுப்பில் ''விருந்தாளி'' என்கிற அக்கதையின் முதன்மைப் பாத்திரம் மலைப்பாங்கான ஒரு கிராமத்தில் பள்ளி ஆசிரியனாகப் பணிபுரியும் ஒரு பிரஞ்சு அல்ஜீரியனைப் பற்றியது. அக்கதையின் சுருக்கம்.

ஒருநாள்; உள்ளூர்க் காவல்காரர்கள் அராபியக் கைதி ஒருவனைப் பள்ளி ஆசிரியரிடம் அழைத்து வருகின்றனர். அந்தக் கைதியை பொறுப்பேற்கும் படியும் மறுநாட்காலை அவனை அருகில் உள்ள சிறைக்கு இட்டுச் செல்லும்படியும் பணிக்கின்றார்கள். கைதி ஒரு கொலையாளி அல்ல. இருந்தபோதிலும் பள்ளி ஆசிரியனுக்குத் தான் ஒரு சிறைக்காவலன் ஆகும் எண்ணத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அடுத்தநாள் அந்த அராபியனை மிக அருகாமையில் உள்ள காட்டுப்பாதைக்கு பள்ளி ஆசிரியர் அழைத்துச் செல்கிறார். அவர் அராபியனுக்கு சிறைச்சாலைக்கு செல்லும் வழியையும், நாடோடிகளின் கூடாரங்களுக்கு செல்லும் வழியையும் காட்டுகிறார். அராபியனுக்கு உணவும் கொடுத்து அங்கே விட்டு விடுகிறார். பின்னர் அம்மனிதன் எவ்வாறு செல்கிறான் என்று பார்க்கத் திரும்பியபோது; அவன் நாடோடிகளின் இருப்பிடம் நோக்கிச் செல்லாமல் சிறையை நோக்கிச் செல்கிறான். பள்ளி ஆசிரியர் பள்ளிக்குத் திரும்பியதும் சில அராபியர்கள் இவ்வாறு கரும்பலகையில் எழுதி இருப்பதைப் பார்க்கிறார். ''நீ எங்கள் சகோதரனை ஒப்படைத்திருக்கிறாய். இதற்கு ; பதில் அளிக்க வேண்டிவரும்''

வாழ்க்கையின் எதிர்மறை பற்றிய அனுபவம் நிறையவே ''காம்யூ''வுக்கு கற்றுத் தந்திருக்கிறது. ''காம்யூ'' இறந்த சூழ்நிலையில் கூட எதிர்மறை இருந்தது. 1960ம் ஆண்டு ஜனவரி 04ம் திகதி பாரிசுக்கு ரயில் சீட்டு வாங்கியிருந்த ''காம்யூ'' தனது நண்பருடன் காரில் பாரிசுக்குப் பயணம் செய்ய ஒப்புக் கொண்டார். வெளிப்படையான எந்தக் காரணமும் இன்றி கார் பாதையில் இருந்து திரும்பி ஒரு மரத்தில் மோதியது.

''காம்யூ''வும் அவரது நண்பரும் இறந்து போயினர்.




உட்கொலை மலிந்து
விடுதலைக் கனவுகள் சிதைந்த
எண்பத்தாறின் கோடை.
ஏழை பஞ்சில் ஆடையும்
பஞ்சு ஏழையில் அணிகளும் நெய்கிற
கோவைப் புறநகர்.
தலைமறைந்திருந்தேன்.

'பார்த்தீனிய' செடிச்சாத்தான்கள்
சிரிக்கிற வெளியில்
விழுந்த நிலவு உடைந்து வழிகிற இரவில்
சன்னலில் நானுமோர் கம்பியாய் நின்றேன்.

மின்னலில் இறங்கி நிலவை மீட்க
தாரகைகள் திட்டம் தீட்டின.
காப்பாற்றுங்கள் என்ற என் கூச்சலில்
பால்வழி அதிர்ந்தது.
வாழும் ஆசையே மனிதரை மீட்கும் என
தாரகைகள் கண்சிமிட்டின.
மானுடத்தின் வரப்பிரசாதம்
வாழும் ஆசையே என்பதை உணர்ந்தேன்.
கம்பளிப் பூச்சியாய் கைகளுள் நெரிபடும்
நித்திரைக் குளிகைகளைத் தூர வீசினேன்.
தொலைந்த வாழ்வின் ஆசையைத் தேடி
கதவைத் திறக்க ஞானம் சுடர்ந்தது.

விடிகதிர் புணர விந்துதிர்கின்ற
முல்லைப் பந்தரின் கீழே வாசலில்
துவாலையும் சிறுவாணி தேக்கமும் சேர்த்து
அள்ளி முடித்த மயிரி
ஒரு சுந்தரியான மலையாளக்குட்டி
கோல்மான சிந்தும்
செம்மீன் விரலால் நிலம் தீண்டி
வாழ விருப்பம் என்று எழுதுகிறாள்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

www.tamilarangam.net



# J.V.P

ஆர்.குணசீலன்



# 25வது வருடக் கொண்டாட்டமும், மீள்வருகையும்

இலங்கையின் வரலாற்றில் முதன் முதல் ஏற்பட்ட ஒரு ஆயுதக் கிளர்ச்சியின் 25 வருடங்கள் கடந்த ஏப்ரல் 05ம் திகதியுடன் முடிந்து விட்டது. 1971ம் ஆண்டு அக் கிளர்ச்சி நடவடிக்கையின் போது முன்னணி வகித்தவர்களில் அநேகர் இப்போது உயிருடன் இல்லை. 1971 தொடக்கம் இன்று வரையான 25 வருட காலத்தினுள் சிங்கள இளம் பரம்பரையினர் அநீதிக்கும் அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் பேர்போன அரசுக்கு எதிராக இரண்டு தடவைகள் தமது கரங்களில் ஆயுதங்கள் ஏந்த வேண்டியவர்களானார்கள்.

பொருளாதார சமத்துவமின்மை, வளங்களை பங்கீடு செய்யாமை, ஊழல், மோசடி, வேலை வாய்ப்பின்மை, சமூக ஏற்றத் தாழ்வுகள் இளைஞர் யுவதிகளை புரட்சியின் பால் அக்கறை கொள்ள வைத்தன. ஆயிரக் கணக்கான இளைஞர் யுவதிகளின் சடலங்கள் மீது கட்டியெழுப்பப் பட்ட ஜே.வி.பியின் புரட்சி, கற்பனைப் புரட்சியாகவே இரண்டு தடவைகளும் முடிவடைந்தன.

1968ம் ஆண்டு அநுராதபுரத்தில் வைத்து ரோஹன விஜேவீரவினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஜேவிபி இன்னும் தென்னிலங்கையில் இளைஞர்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழந்து விடவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்களின் உக்கிரமான அரசியல், ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் தருணத்தில் சிங்கள மக்கள் மத்தியிலும் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு ஆளும் இயந்திரத் திற்கெதிராக சிங்கள மக்களும் ஆயுதம் ஏந்த வேண்டியவர்களாக உள்ளனர்.

71ம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது இராணுவத்தால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட கதிர்காம அழகி மனம்பேரியின் கண்ணீர்க் காவியத்தை முன்னைநாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் மேடைகளில் ஏலத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டார். இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் 87,89 கிளர்ச்சிகளின் போது காணாமல் போனவர்களின் எலும்புக் கூடுகளை பிரச்சார மேடைகளில் விற்று 1994ம் ஆண்டில் இந்த நாட்டின் ஜனாதிபதியானார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாப் பிரச்சினையும் சமூக பொருளாதார அரசியல் காரணிகளும் 71ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கும் 87,89ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கும் வித்திட்டன. இக் காலகட்டங்களில் இருந்த அரசுகள் இதனைக் கொடூரமாக அடக்குவதற்கு தனது அரச இயந்திரங்கள் சக்திகள் அனைத்தையும் பாவித்தன.

வடக்கு கிழக்கு மக்கள் சந்தித்த அனைத்துக் கொடூரமிக்க நிகழ்வுகளையும் தென்னிலங்கை மக்கள் சந்தித்தனர். ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் அரச பயங்கரவாதத்தில் தீய்ந்து போயினர். டயர்களில் மனித உடல்கள் எரிந்து கொண்டிருந்தன. மனித எலும்புக்கூடுகளில் தடுக்கி விழப்போகிறோம் என்பதற்காக தெற்கு மக்கள் வீதிக்கு வர அஞ்சி இருந்தனர்.

மிகவும் கொடூரங்களைச் சந்தித்து கஷ்டப்பட்ட இச்சிங்கள மக்களின் போராட்டம் அடியோடு நசுக்கப்பட்டதிற்கு பல்வேறு தவறுகள் காரணமாகின்றன. கிளர்ச்சியை முன்னெடுத்த ஜேவிபியினரின் போக்கு இப்போராட்டத்தைப் பலவீனப்படுத்திற்று.

1970களில் ஜேவிபியின் தீவிர வளர்ச்சிக்குக் காரணமாக கிராமப் புறங்களில் சிங்கள மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டனர். கருத்தரங்குகள், பாசறைகள், ஆயுதச் சேகரிப்பு, ஆயுதப்பயிற்சி என ஜேவிபியின் நடவடிக்கைகள் தென்னிலங்கையில் தீவிரமடைந்தன. 1970களில் ஜேவிபியின் அரசியல் குழு அங்கத்தவர்களாக இருந்தவர்களான ரோஹண விஜேவீர, விஜேசேன வித்தான, கருணாரத்ன, நிமலசிறி ஜெயசிங்க (தற்போது பிரதி அமைச்சர்), அனுல குருகுல சூரிய, சுனந்த தேசப்பிரிய (தற்போது யுக்திய ஆசிரியர்), ரி.டி.த.சில்வா, லக்ஷ்மன் மதுவாகே, சிசில் சந்திர தனபால, சோமசிறி குமரநாயக்க, ஜயதேவ உயங்கொட (தற்போது கொழும்புப் பல்கலைக்கழக அரசியல்பீட பேராசிரியர்) ஆகியோரால் இப்புரட்சிகரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

> 71ம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது இராணுவத்தால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட கதிர்காம அழகி மனம்பேரியின் கண்ணீர்க் காவியத்தை முன்னைநாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் மேடைகளில் ஏலத்தில் விட்டார். இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் 87,89 கிளர்ச்சிகளின் போது காணாமல் போனவர்களின் எலும்புக் கூடுகளை பிரச்சார மேடைகளில் விற்று 1994ம் ஆண்டில் இந்த நாட்டின் ஜனாதிபதியானார்.

முதலாளித்துவத்தை ஒழிப்போம், சமதர்மம் காப்போம் என முன்முழங்கிய ஜேவிபியினர் நாடு முழுவதும் தனது பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திய நேரம். இதற்கு முகம் கொடுக்க முடியாத அரசு, அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி அம்பாறையில் வைத்து ரோஹண விஜேவீரவைக் கைது செய்து தடுப்புக் காவலில் அடைத்தது.

ஒரு இரவுப் புரட்சியினால் நாடு கைப்பற்றப்படல் வேண்டும் என்ற ஜே.வி.பியின் இலக்கின் காரணமாக 1971 ஏப்ரல் 05ம் திகதி ஜே.வி.பியின் தாக்குதல் முடக்கிவிடப்பட்டது. இதன் பலவீனம் காரணமாக ஜே.வி.பியின் அலரிமாளிகை அதிகாரத்தைக் கைப்பற்றும் கனவு சிதைந்து போயிற்று. தலைமுறையொன்றின் வழிதவறிய புரட்சிகர சித்தாந்தம் சடலங்களாய் எரிய, ஆயிரக்கணக்கானோர் சிறை செல்ல முற்றுப் பெற்றது.

6 வருட கால சிறைவாசத்தின் பின் 1977ம் ஆண்டு இறுதியில் ஜே.ஆர் ஜெயவர்த்தன பதவிக்கு வந்தவுடன் அரசியல் அரங்கில் பங்கு கொள்வதற்காக எனச் சொல்லப்பட்டு ரோகண விஜேவீரவும் அவரது உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

www.tamilarangam.net



ஜே.வி.பியின் கருத்தோட்டம், மார்க்ஸிய லெனினிஸம் என்று கூறிக் கொண்டாலும் கருத்தியல் கூறுகளில் சிங்கள தேசியவாதத் தன்மை அதிகம் ஆளுமை பெற்றிருந்தது. ஜே.வி.பியில் ஆட்கொண்டிருந்த சிங்கள தேசியவாதத் தன்மை காரணமாக ஜே.வி.பியின் போராட்டத்தில் சிறுபான்மையினரின் பங்களிப்பு குறித்து எப்போதும் பாரிய கேள்வியே இருந்தது. ஜே.வி.பி தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சினை களை ஆரம்பகாலம் தொட்டு எப்படி நோக்கியது என்பது மிகவும் சர்ச்சைக்குரியதாகிறது.

ஜே.வி.பியின் ஐந்து கோட்பாடுகளில் இரண்டாவது கோட்பாடு இந்திய விஸ்தரிப்பு வாதமாகும். இக் கோட்பாட்டின் மூலம் இந்திய முதலாளிகளும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் இந்திய விஸ்தரிப்புவாதி களாக இனம் காணப்பட்டனர். சிங்கள தேசியவாதத் தன்மையின் போக்கினால்; தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், அவர்களின் உரிமைகளை ஜே.வி.பியினர் இனம்காணத் தவறினர். முற்று முழுதாக சிங்கள ஆதிக்கத்தைக் கொண்டிருந்த ஜே.வி.பியினர் சிறுபான்மை யினரின் ஆதரவில் தங்கியிருக்கும் ஒரு புரட்சிகர இயக்கம் வெற்றிபெற மாட்டாது என்பது இவர்களின் கருத்தாகும். சிறுபான்மையினரை படிப்படியாக சிங்களப் பெரும்பான்மைக்குள் உள்வாங்கிக் கொள்வதே இவர்களின் இறுதித் தீர்வாக இருந்தது.

இன்று நடைபெறும் தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஜே.வி.பியினர் ஒரு ஏகாதி பத்திய சதியென்றே குற்றம் சாட்டி வந்திருக் கின்றனர். 1982இல் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் வேட்பாளராக ரோஹண விஜேவீர போட்டியிட்டார். தென்னில ங்கையில் அவரது பிரச்சாரம் முற்று முழுதாக சிங்கள தேசியவாதத்தைக் காக்கும் ஒரு போர் வீரனாக அவர் இருப்பதை உறுதிப்படுத்திற்று.

ரோஹண விஜேவீர 83க்குப்பின் தீவிரமாக சமஷ்டி முறையை எதிர்த்தார். இதனால் சிங்கள இனவாதத்தை தூண்டுவதில் இவரின் பங்களிப்பு கணிசமாகவிருந்தது. சிறுபான்மையினரின் போராட்டத்தை எப்போதும் முற்று முழுதாகவே மறுத்து வந்த விஜேவீர - தமது போராட்டத்தில் தோல்வியைத் தழுவியவராக ஈற்றில் மரணித்துப் போனார்.

1984ம் ஆண்டு ஏப்ரலில் வீரர்களை நினைவு கூரும் விஜேவீரவின் அறிக்கையில் நான் உயிரு டன் இருக்கும் வரை, ஜே.வி.பி இருக்கும் வரை, நாட்டை துண்டாட இடமளிக்கமாட்டோம், எம்மினம் எதிர்நோக்கும் அபாயத்தில் இருந்து எமது இனத்தையும் எமது நாட்டையும் காக்க நாம் எத்தியாகத்தையும் செய்யத் தயாராகவிருக் கிறோம் எனக் குறிப்பிட்டார். இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினர் தொடர்பான இனவாதக் கண்ணோட்டத்தை இது வெளிப்படுத்தி நிற்கிறது.

ஜே.வி.பியின் தற்காலத் தலைமை கடந்தகாலத் தவறுகள், தமிழ் முஸ்லீம் மக்களின் பிரச்சினை கள், சிறுபான்மை இனங்களுடனான உறவுட னான விடுதலையை முன்னெடுத்தல் போன்ற விடயங்களில் அதிக அக்கறை செலுத்தி கொடூர மான நிகழ்வுகளுக்கெதிராக பரந்துபட்ட ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமா என்பதே எமது கேள்வியாகும்.

---


பொருளாதார சமூகப் பின்னணிப்
பார்வைமூலம் இன வன்முறைக்கு
முழுமையான விளக்கம் கூறமுடியாது!
ஆயினும் இதுவே பிரச்சினையை
ஆராய்வதற்கான சில முக்கிய
ஆதாரங்களைத் தரமுடியும்- காலனித்துவ,
நவகாலனித்துவ சூழலில் உருவாகும்
புறச் சூழலிலுள்ள நாடுகளின்
முதலாளித்துவம் அதன் சமனற்ற
அபிவிருத்தியும் பிற்போக்குத் தன்மையும்
பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையை
சீராக மாற்ற முடியாத தன்மையையும்
ஆராய்வது இனமுரண்பாட்டை நன்கு
தெரிந்து கொள்வதற்கு உதவக்கூடிய
முக்கிய அம்சங்களாகும்-

குமாரி ஜெயவர்த்தனா

www.tamilarangam.net



# சிங்கள திரைஉலக வரவில் "சிஹின தேசயென்" உயர்ந்த சிகரங்களிலொன்று



விஸ்வநாத் புத்திகே கீர்த்திசேனவின் படைப்பான சிஹின தேசயென் எனும் சிங்களத் திரைக் காவியம் இப்போது அதிகம் பேசப்படுகிறது. பேசப்படுவதற்கான அரங்குகளில் பலத்த தாக்கத்தை இப்படம் ஏற்படுத்திற்று.

சிஹினதெசயென் பற்றி சிங்கள திரையுலக விமர்சகர் ஒருவர் இப்படிச் சொல்கிறார், ''அரை நூற்றாண்டு காலமாக வெளிவந்த சிங்கள சினிமாவிலிருந்து இப்படத்தை சீர்தூக்கிப் பார்க்கும்போது, சிஹினதேசயென் ஒரு முன்னுதாரணமாகும். இப்படம் வழமையான சிங்களப்படங்களிலிருந்து வேறுபட்டு, வழமையான ஆதிபத்தியத்திலிருந்து விடுபட்டு தனித்துவமான தன்மைகளைக் கொண்டு மிளிர்ந்து நிற்கிறது, குறை ஊட்டநிலையிலிருந்த சிங்கள சினிமாவிற்கு இப்படம் உயிரூட்டியுள்ளது. இதுவரை எம்மிடமிருந்து புதிய தரமான வார்ப்புகள் உருப்பெறாமல் இருந்தமைக்கு - முழுமையான படைப்பினைத் தரிசிப்பதற்கு சமுதாயம் பொதுவாக உளவியல் ரீதியாக வளர்ச்சியடையாமை ஒரு காரணம்தான். இன்று இவற்றைத் தாண்டி இப்படம் சிங்கள சினிமாவின் எதிர்காலத்திற்கு ஒரு புதுத் தெம்பைத் தந்திருக்கிறது. இந்நாட்டில் உருவாகும் படைப்புக்கள் இம்மண்ணிலிருந்தே தாம் சுவாசிக்கும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்டவையாகவே இருக்க வேண்டும். அது சிஹினதேசயென் வில்கொஞ்சமும் பிசகவில்லை என்கிறார்.

பல்வேறுபட்ட வாழ்வியல் எதிர்பார்ப்புகளைக் கொண்டதும்; ஆத்மாவின் உணர்வுகளின் தளம் கொண்டதுமாக இப்படம் உள்ளது. இவற்றிற்கு அடையாளமாக சித்தரிக்கப்படும் பாத்திரங்கள் உணர்வுபூர்வமாகவும் யதார்த்தமாகவும் அமைந்திருக்கிறது.




நிலையாமை, துயர்கொள்ளாமை, வினைப்பயன் ஆகிய கருக்களை அடிப்படையாகக் கொண்டு கதாபாத்திரங்கள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. மூன்றாம் உலக நாடுகளில் வாழும் இளைய தரப்பினர் கிராமிய, நகர்ப்புற, மேற்கத்திய நாகரிகம் போன்ற தளங்களில் வாழ்ந்து வருகின்றனர். சித்த, ராஜித்த, விஸ்வானந்த, ஹரிசன் போன்ற சமூகப் பாத்திரங்களின் ஊடாக பல பிரச்சினைகளைத் தொட்டிருக்கிறார் - புத்திக கீர்த்தி சேன.

இத்திரைப்படம் வழமையான சிங்கள சினிமாவின் போக்கிலிருந்து தூரவிலகி அனுபவபூர்வமான உணர்வுகளைத் தொடக்கூடிய அபூர்வ வார்ப்பாகவிருக்கிறது. வாழ்வின் மீது நிச்சயமாக காட்டப்பட்ட மரணத்தை மனிதன் கண்டு துயருறுகிறான். மனிதனுக்கு மரணமென்பது எவ்வித முன்னறிவித்தலுமின்றி வந்தே தீரும். மரணம் வருவதை நினைத்து; வாழும் மனிதன்

www.tamilarangam.net



சதா செத்துக் கொண்டிருக்கிறான். மனிதன் ஆசையை வளர்த்துக் கொள்கிறான், ஆசை துன்பத்தை விளைவிக்கிறது என்பன போன்ற செய்திகள் இப்படத்தின் மூலம் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒரு நாடகக் குழுவின் பிரதான தளத்தைக் கொண்டு அதில் வரும் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. சரித்தவின் அகால மரணத்தினால் அவன் சகோதரன் ராஜித பெருந்துயரடைகின்றான். யுத்தத்தினால் கொல்லப்பட்ட தனது சகோதர இராணுவ வீரரின் மரணம் ராஜிதவை பெருமளவு துயரம் கொள்ள வைக்கிறது. ஒருவரின் மரணம் மற்றொருவரை ஏன் துன்பத்திற்குள்ளாக்குகிறது?

வாழ்க்கையில் எழும் மனப் போராட்டங்கள், மனித பாலியல் தேவைகள், தனிமனித துயரம் போன்றவை காரணமாக எழும் அனைத்து நிகழ்வுகளையும் சகல தடைகளையும் மீறி இத் திரைப்படம் வெளிப்படுத்தி நிற்கிறது. வாழ்வில் எதிர்ப்படும் பிரச்சினைகளிலிருந்து தப்பியோட எத்தனிக்கும் மனிதன், மரணத்திலிருந்து தப்ப முடியவில்லையே என்பது அழுத்தமான செய்தியாகும்.

இத் திரைப்படத்தில் கையாளப்பட்ட தொழில்நுட்பம், காமிராக் கோணங்கள் மிகவும் சிறந்தமுறையில் கையாளப்பட்டிருக்கிறது. சிங்கள சினிமா எதிர்காலத்தில் உச்சத்தைத் தொடும் அடிவான் வெளிச்சம் இப்படத்தில் உதயமாகியுள்ளது. சர்வதேச சினிமாவிற்கு முன்னால் நெருக்கடி நிலைக்குள்ளாகி இருக்கும் தேசிய சினிமாவின் இருளடைந்த பயணத்திற்கு சிஹினதேசயென் ஒரு ஒளிக்கீற்றாகும்.

ஆழமான நமது பிரச்சினைகளைத் துணிந்து சொல்ல முற்பட்ட கலைஞர் புத்திகே கீர்த்திசேன நமது கவனத்திற்குரியவராகிறார்.

எம்.ரி.முஹானிரீன்.

## கோமலின் மறைவுடன் 'சுபமங்களா' வெளிவராதா?



தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழ் இலக்கியத்திற்கு புது இரத்தம் பாய்ச்சிய பெருமை சிறு சஞ்சிகைகளையே சாரும். வணிகப் பத்திரிகையின் நோக்குகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், இலக்கியத்தில் புதிய சாளரங்களைத் திறந்து விட்டவர்கள்தான் சிறு சஞ்சிகைக் காரர்கள் தமிழகத்திலிருந்து வெளிவந்த சிறு சஞ்சிகைகளின் வரவு, இளம் தமிழ் எழுத்தாளர்களின் சிந்தனைக்கு தீனிபோட்டு, அவர்களின் விசாலமான பார்வை நோக்குக்கு காரணமாய் இருந்திருக்கின்றது.

ஈழத்தில் சிறு சஞ்சிகைகளின் தோற்றம் மிகவும் குறுகிய ஆயுளைக் கொண்டிருந்தாலும் கூட, அதனுடைய வீச்சங்கள் வணிக நோக்கு

www.tamilarangam.net



சஞ்சிகைகளைவிட அதிக கனதி கொண்டிருப்பதை நாமறிவோம். ஈழத்தில் மல்லிகையின் தொடர்ச்சியான வருகை ஒரு சாதனை படைத்திருக்கிறது.

புலம்பெயர் நாடுகளில் அல்லலுறும் எமது படைப்பாளிகளின் தீவிர முயற்சி காரணமாகவும் அவர்களுடைய இலக்கிய ஆர்வம் காரணமாகவும் புலம்பெயர் நாடுகளிலிருந்து பல சிறு சஞ்சிகைகளின் வரவு 1990களில் அதிகமாகவிருந்தது. இப்போது புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவரும் சிறு சஞ்சிகைகளின் வரவில் ஒரு கணிசமான தேக்கம் காணப்படினும் பலசிறு சஞ்சிகைகளின் வரவு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஈழத்தில் புதிய பரிமாணம் கொண்ட இலக்கிய வீச்சை, தமிழ்கூறும் உலகின் பார்வைக்கு கொண்டு வந்த பெருமை ஈழத்திலிருந்தும் புலம்பெயர்நாடுகளிலிருந்தும் வெளிவந்த சிறு சஞ்சிகைகளையே சாரும். இவ்விடயத்தில் சிறு சஞ்சிகைகளின் பங்களிப்பு கணிசமானது.

தமிழகத்திலிருந்து வெளிவந்த சுபமங்களா சஞ்சிகை ஆரோக்கியமான இலக்கியச் சூழலுக்கு ஒரு புதிய காற்றாக வந்தது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஈழத்திலும் அதன்பால் எம்மவர்கள் அதீத ஈடுபாடு கொண்டிருந்தனர். சுபமங்களாவும் எம்மவர்கள் மீது எமது இலக்கியத்தின் மீது அதிக அக்கறை கொண்டிருந்ததை யாவரும் அறிவர்.

ஈழத்து இலக்கியத்திற்கு அடிக்குறிப்புகள் தேடும் நந்திமகேஸ்வரர்கள் நிறைந்த தமிழகச் சூழலில்; துணிந்து நின்று ஈழத்து இலக்கியத்தின் தவிர்க்கவியலாத இன்றைய வளர்ச்சியை தமிழக இலக்கியக்காரர்களின் பார்வையின் மீது பதிய வைக்க தீவிரமாக உழைத்தவர் கோமல், அதற்கு அவர்மிகவும் போராட வேண்டியும் இருந்தது.

ஒரு கலை இலக்கிய விமர்சகர் என்ற ரீதியில் ஈழத்து இலக்கியம் தொடர்பாக அவரொரு பச்சாதாபத்திற்கு அப்பாற்பட்ட பார்வையே கொண்டிருந்தார் என்பது அவரது மரணம் வரையிலும் மாறாது உண்மையாயிற்று. ஈழத்தில் நடைபெறும் போராட்டம் காரணமாக ஈழத்தின் கவிதை வளர்ச்சி தமிழ்நாட்டின் கவிதையை விடவும் தாண்டி விட்டது என்பது அவரது கருத்தாகவிருந்தது.

ஈழத்துப் படைப்புகளின் மீதும் கலைஇலக்கிய முயற்சிகள் மீதும் படைப்பாளிகள் மீதும் அதிக ஈடுபாட்டைக் கோமல் கொண்டிருந்தார் என்பது அவருடைய சுபமங்களா இதழில் அவர் எம்மவர்க்களித்த படைப்புரீதியான பங்களிப்புகளிலிருந்து தெரியவரும்.

இன்று ஈழத்தில் நடைபெறும் அரசியல் ஆயுதப் போராட்டம் குறித்து அவர் என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பது குறித்துப் பல கேள்விகள் இருந்தும் அவற்றிற்கு மேலாகத் தனது நோயையும் மீறி, வேலைப்பளுவின் மத்தியிலும் அவர் எம்மை சந்திப்பதற்கு ஈழத்திற்கு வந்தார் என்பது கோமலுடனான எமது நேசம் பற்றி சொல்வதற்கு போதுமானதாகும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று அம்மக்களின் துன்ப துயரங்களில் சதா தோய்ந்த வாழ்வை சிலநாள் எம்மவர்களுடன் இருந்து அனுபவித்தார். யாழ்ப்பாணத்திலிருந்து பல சிரமங்களுக்கும் அபாயத்திற்கும் மத்தியில் கொழும்பு திரும்பிய அவரை இந்து கலாசார அமைச்சு மண்டபத்தில் சந்தித்தபோது கோமல் சொன்ன கருத்துக்கள், அவரின் பார்வையின் பிரதிபலிப்பு அவர் பற்றி நாம் அதிக அக்கறை கொள்வதற்கும் அவரின் மறைவு கேட்டு துயர் கொள்வதற்கும் அதிக காரணமாய் இருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம்; கடல்கடந்தும் நம்மை நேசித்த ஒரு கலைஞனுக்கு மேலான மனிதர் அவர்.

கோமலை முதன் முதலாக நான் சந்தித்த 1994 மார்ச் 16ம் திகதிய எனது டைரியில் - அன்றைய சந்திப்பை நான் இப்படித்தான் எழுத நேர்ந்திருக்கிறது

**இன்றுமாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இந்தியத் தமிழ் எழுத்தாளரும் சுபமங்களா இலக்கிய**

www.tamilarangam.net



சஞ்சிகையின் ஆசிரியருமான கோமல் சுவாமி நாதனின் இலக்கியச் சந்திப்பு இடம்பெற்றது. நானும் அச் சந்திப்பிற்கு சென்றேன். என்ன அற்புதமான விசயஞானமுள்ள மனிதர் அவர். நவீன இலக்கியத்தின் மீது அவர் கொண்டுள்ள அதீத வாசிப்பு அவாது பேச்சில் வெளிப்பட்டது. எந்த பட்டமும் இல்லை, எந்த பந்தாவும் இல்லை எளிய மனிதராகவே இருந்தார் கோமல்.

கேள்வி நேரம்;

ஈழத்து இலக்கியத்தின் உள்ளீடுபற்றி தமிழக இலக்கியவாதிகள் என்ன நினைக்கிறார்கள் - அது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன? எனவும் கேட்டேன்.

அந்த மனிதர் மனம் திறந்து சொன்னார்.

''உண்மை சொல்லி நான் தமிழக எழுத்தாளர் கள் நிறையப்பேரைப் பகைத்துக் கொண்டு விட்டேன். இது ஈழத்துக் கவிதைகள் பற்றிய அபிப்பிராயமாகவே மட்டும் கொள்ளப்படல் வேண்டும்'' என்றார்.

இது பற்றி நமது இலக்கிய உலகு சிந்திக்குமா எனக் கேட்கிறேன். சிறுகதை?, நாவல்?, நாடகம்? சினிமா? உட்பட ஏனைய முயற்சிகளில் எம்மவர் களின் பங்களிப்பு - முயற்சி என்னவாயிற்று? இதுவே எனது இன்றைய கேள்வி!

இது எனது 1994 மார்ச் 16இன் டைரிக் குறிப்பு.

இன்று கோமல் தமிழ்கூறும் நல்லுலகில் உயிருடன் இல்லை. அவரது மறைவு அதீத இழப்பாயிற்று. அதைவிடவும் துயர் தருவதானது அவர் மேற் கொண்டு வந்த சுபமங்களா எனும் சஞ்சிகையின் வருகை அவருடன் நின்று போனதாகும்.

கோமல் நேசித்த, அவர் யாகமாக மேற்கொண்ட அவரது சுபமங்களாவை அவர் சாதிக்க நினைத்த வகையில் வெளிக் கொணர்வதே அவரது ஆத்மாவுக்கு சந்தோஷம் தருவதாக இருக்கும்.

சுபமங்களா வெளிவருமா?

வெளிவர வேண்டும் என்பதே எமது வேண்டு தலாகும்.

**- மர்லினா பறக்கத் -**

## மற்ற நான்

எனது "முன்" தேய மற்ற நானாய்
உருவெடுத்து ஊசித் துளையெனச் சுருங்கியும்
போஸ்டர்கள் அப்பிய சுவராயும்
எல்லாம் நுழைந்தப்பி நான் போவேன் காணாமல்.

என்னில் இன்னொரு நானென
பெய்யுமிந்த மழைபோல்
சொட்டுச் சொட்டென ஏதோ இறங்க
ஆவியாயும் போவேன் எங்கோ சூன்யமாய்
ஏதுமற்று..

முன்னும் பின்னுமென
நான் மட்டும் காதலித்த அவள்களும்
என்னையும் காதலித்த அவளும்
பாலைப் பெரு வெளியெனச்
சுடுநிலமாக்கினர் என்னை இந்தப் பின்னிலும்.

அடர் புல்வெளிகளில்
ஒற்றைப்புழுவென ஊர்ந்தூர்ந்து
வண்ணாத்துப் பூச்சியாகிற கனவுகளில்
இறந்து...பின்னெழுந்து
மீண்டும் மீண்டும் இறந்து போவேன்.

நகரத் தெருக்களை நிரப்பிய காக்கிகளின்
பயண மறிப்புச் சோதனையில்
என் அடையாளம் பழைய நானாய்ப்
பெயர் மட்டும் காட்டி பின் திரும்ப
நம்நாட்டுப் "பண்ணை"களின் நடமாட்டம்
மற்றும் முழங்காலுக்குச் சற்று
மேலெனத் தெரியும் வெட்டும் வெளியும் பார்த்து
மற்ற நானாய்ச் சடுதியில் பிறப்பெடுப்பேன்.

வெட்கம்-வெள்ளைக்காரனிடமும்
பிள்ளைத்தாச்சி மற்றும் நண்பனுக்கு முன்னால்
போவது கூட உணர்வு தர மறுக்கிற
இந்த நான்....ரிவிரச இரண்டெனப்
போதல் கூடாதென பழைய "நானி"ல்
எங்கோ உயிர்த்திருக்கிற ஓர் அணுவின்
தட்டியெழுப்புகிற குரல்.

என்னில் இன்னொரு நானும்
எனது நானும்
யார் யார்?

*எம்.கே.எம்.ஷகீப்*

www.tamilarangam.net



முழுவானமும் கார்முகிலால் கறுத்திருந்தது. சுற்றுப்புறம் வெறிச்சோடி இருக்கின்றது. மரண அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. ஏனைய நாட்களில் வானம் என்ன சௌந்தர்யமாய் வர்ணங்கள் கூடியதாய் காட்சியளிக்கும். எங்கள் வீட்டு சாரளத்தின் ஊடாக நோக்கும் போது ஆதவனின் அஸ்தமனம் எவ்வளவு அபூர்வமாக இருக்கும். அந்நேரத்தில் வானத்தில் தோன்றும் வர்ணஜாலங்கள் என் மனதை குதூகலிக்க வைக்கும். ஆனால் இன்றைய அந்த சூழல் கண்ணீர் சிந்துகின்றது.

# தீப்பரவல்

இந்தமுறை இரண்டில் ஒன்று நடக்கும். இப்படி எந்தநாளும் வாழமுடியாது. கொழும்பு வர்த்தகம் முழுவதும் அவர்கள் இடத்தில். ஆனால் ஒரு சிங்களவனுக்கும் யாழ்ப்பாணம் போக முடியாது எனக் கூறிக் கொண்டு தந்தை வீட்டிற்குள் நுழைவதைக் காண்கின்றேன். தந்தையின் முகத்தில் ஒருநாளும் இல்லாத கடுகடுப்பும் கோபமும் காணப் பட்டது.

நாலாபக்கமும் சுவாலைகள் வான் நோக்கி எழுந்த வண்ணம் இருக்கின்றது. எங்கள் வீட்டிற்கும் பக்கத்தில் இருந்த இரு வீடுகளில் தீச் சுவாலைகள் பற்றி எரிந்தன.

சும்மா இருந்த சிங்களவர்களை தூண்டிவிட்டாயிற்று. எந்த நாளும் மௌனமாக இருக்க முடியாது. தந்தை இப்படி கூறிக்கொண்டே வீற்டிற்குள் வந்தார். அவ்வமயம் அம்மா தந்தையை மௌனமாக இருக்கும்படி சமிக்கை செய்வதைக் காண்கின்றேன்.

''சும்மா சத்தம் போட வேண்டாம். அடுத்த வீட்டு தமிழ்க் குடும்பம் 'ஸ்டோர் ரூமில்' இருக்கிறார்கள். வீடு தீப்பற்றி எரியும் போது கைக்குழந்தையுடன் இங்கு ஓடி வந்தாள்'' அம்மா பௌவியமாக மெல்லிய குரலில் கூறினாள்.

''என்ன இழவுக்கு அவர்களை இந்த வீட்டிற்குள் எடுத்தீர்'' இவர்களில் ஒருவரையாவது வாழவிடக்கூடாது. நீர் சிங்களவர் இல்லையா? எங்களது சனத்தை பச்சை பச்சையாகக் கொல்லும் பொழுது எங்களுக்கு மேலும் பொறுக்க முடியுமா?'' தந்தை மிகக் கோபமாக அம்மாவை திட்டுவது கேட்கிறது.

''எப்படி நான் அவர்களை துரத்துவது. எங்களது குழந்தையைப் போல் ஒருமாதக் குழந்தையின் தாயல்லவா?'' தான் தப்பிக்க அம்மா கூறிய காரணமும் கேட்கிறது. தந்தை மிகக் கோபமாக அம்மாவைத் திட்டிக்கொண்டு இருவரும் பின் அறைக்குப் போவதைப் பார்த்த வண்ணம் இருக்கின்றேன்.

முழுவானமும் கார்முகிலால் கறுத்திருந்தது. சுற்றுப்புறம் வெறிச்சோடி இருக்கின்றது. மரண அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. ஏனைய நாட்களில் வானம் என்ன சௌந்தர்யமாய் வர்ணங்கள் கூடியதாய் காட்சியளிக்கும். எங்கள் வீட்டு சாரளத்தின் ஊடாக நோக்கும் போது ஆதவனின் அஸ்தமனம் எவ்வளவு அபூர்வமாக இருக்கும். அந்நேரத்தில் வானத்தில் தோன்றும் வர்ணஜாலங்கள் என் மனதை குதூகலிக்க வைக்கும். ஆனால் இன்றைய அந்த சூழல் கண்ணீர் சிந்துகின்றது.

நாற்புறமும் வெடிச் சத்தங்களும் வீடுகளைத் தாக்கும் ஓசையும் கேட்கின்றது. தன்னிலை மறந்த இளைஞர்கள் வீடுகளுக்கு தீ வைத்தும், தாக்கியும் ஓடித் திரிவதை காண்கின்றேன். சில பேர் கொள்ளையடித்த பொருட்களை தோளில் சுமந்தபடி செல்வதும் தெரிகின்றது.

என் முழு சரீரமும் நிலை ததும்பி பயத்தால் வெளுவெளுக்கின்றது. பக்கத்து வீடு இன்னும் எரிந்து கொண்டே இருக்கின்றது. மனம் வேதனையில் துவழ்கின்றது. ''யமபள்ளத்தில்'' (ஒருகிராமம்) இருந்து வந்த ஐந்து இளைஞர்கள்தான் இவ்வீட்டிற்கு தீ வைத்ததை என் மனம் மீண்டும் மீண்டும் அசை போட்டுப் பார்க்கிறது. வீட்டைத் தாக்கி வீட்டுப் பொருட்களை அடித்து நொறுக்கி வீட்டிற்கு தீ வைப்பதற்கு அவர்களுக்கு சிலவினாடிகள்தான் சென்றிருக்கும். ஆனால் இந்த வீட்டை கட்டி முடிப்பதற்கு எத்தனை

www.tamilarangam.net





வருடங்கள் சென்றிருக்கும். வீட்டில் உள்ள பொருட்களை எடுத்துப் பாதுகாப்பதற்கு எவருமே முன்வரவில்லை. வீட்டிற்குள் இருந்த தமிழ்ப் பெண் கைக்குழந்தையுடன் உடுப்பு பொட்டனியையும் எடுத்துக் கொண்டு எங்களது சமையலறை வழியால் வீட்டிற்குள் நுழைவதை காண்கின்றேன்.

சிலவாரங்களுக்கு முன்பு இங்கு வந்து குடியேறிய இவர்களுக்கும் எமக்கும் அவ்வளவு நெருக்கம் இருக்கவில்லை. அவர்களுக்கு நெருங்கிய அறிமுகமானவர்கள் இல்லாதபடியால் தான் அவர்களை பாதுகாக்க ஒருவரும் முன்வரவில்லைப் போலும். அப் பெண்ணின் கணவன் கொழும்பில் கடையொன்றினை நடத்துகின்றார் என்பதை மட்டும் கேள்விப்பட்டு இருக்கின்றேன்.

பால்குடி கைக்குழந்தையைக் கட்டியணைத்தவாறு சிந்திய கண்ணீருடன் வீட்டிற்குள் வந்த அவளை கண்ட என்தாயின் இதயத்தில் ஈரம் கசிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனது தங்கை பிறந்து இன்னும் ஒரு மாதகாலமாகவில்லை.

தந்தை உடைகளை மாற்றிக் கொண்டு சாய்மனைக் கதிரைக்குப் பாரமானார்.

''மகனே இன்று பாடசாலைக்குச் செல்லவில்லையா?''

''இன்று காலை பத்து மணிக்கே எம்மை வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்'' எனது பதில் இது.

மேலும் தந்தை கூறத்தொடங்கினார்.

''ஒதுக்கும் குப்பைகளைத் தோளில் சுமப்பான் ஏன்'' அதற்காகத்தான் நான் அம்மாவை ஏசினேன். தமிழர்களை வீட்டிற்குள் வைத்திருக்கின்றோம் என எங்களுக்கும் ஏசுவார்கள். எம்முடையவர்களையும் தமிழர்கள் இம்சைப் படுத்தும்போது யாருக்குத்தான் பொறுத்திருக்க முடியும்''

அம்மா விரைவாக வந்தாள். சரியான வேலைதான்; நீங்கள் பால்மாபெட்டி கொண்டு வரவில்லையா? அம்மா கேட்டாள்.

எதைக் கேட்கின்றீரோ எனக்குத் தெரியாது. இன்று காலையில் இருந்து கொழும்பு தீப்பற்றி எரிகின்றது. கடைகளுக்கெல்லாம் தீவைத்துக் கொளுத்தி இருக்கின்றார்கள். போக்குவரத்தும் இல்லை. நானும் ரெயின் ஏறி நெருங்கி அடித்துக் கொண்டுதான் வந்து சேர்ந்தேன். பால்மா மட்டுமல்ல. ஒன்றும் எடுக்கமுடியாத நிலை. இன்றைய பொழுதிற்கு கொத்தமல்லி கொஞ்சம் அவித்துக் கொடும். தந்தை பலத்த குரலில் கூறிக் கொண்டே போனார்.

பிள்ளை இவையெல்லாம்

www.tamilarangam.net



குடிக்கமாட்டாள். இரவாகும் பொழுதுதான் யுத்தம் இருக்கிறது.... தெரியும்தானே... எனக்கு என்ன செய்வதோ தெரியாது... அம்மா சிந்தித்தவாறு பதிலை எதிர்பார்த்தாள்.

றோட்டில் இறங்கி நடக்க முடியாது. ஊரடங்கு சட்டம் வேறு போடப்பட்டிருக்கிறது. எல்லாக் கடைகளும் பூட்டு. பால்மா இங்கு ஒரு பகுதியிலையும் எடுக்கமுடியாது...

இடைக்கிடை வெடிச் சத்தங்கள் ஒலிக்கின்றன. வானளாவ எழும்புகை மூட்டங்களை காணக்கூடியதாய் இருக்கின்றது.

''எனக்கு ஒன்றும் தெரியாது. பச்சிளம்பாலகனுக்கு நான் இன்று என்ன செய்ய, காலையிலும் சிரமப்பட்டே பால் கொஞ்சம் கொடுத்தேன்''

அம்மா வாசல்படியில் அமர்ந்தவாறு கூறினாள்.

''இந்தத் தமிழ்ப் பேய்களால் நாடும் சீரழிந்து விட்டது... எங்களையும் இரையாக்கி நாட்டையும் கைப்பற்ற பார்க்கிறார்கள். இதற்கு இடம் கொடுக்க முடியாது. இது எமது நாடு.'' தந்தை மிகக் கோபத்துடன் கூறினார்.

''பால்மா விடயத்திலேயே எல்லாம் விளங்குகின்றது. முழு வியாபாரமும் அவர்கள் கையில் குழந்தைக்கு என்ன செய்வதென்றே தெரியாது. பாதையில் இறங்கி நடக்கவும் முடியவில்லை. கொழும்பில் தமிழர்கள் என நினைத்து சிங்களவர்கள் சிலபேரையும் வெட்டிக் கொலை செய்து இருக்கின்றார்கள். என்னவென்றாலும் நான் சென்று பார்த்து வருகின்றேன்.

தந்தை இப்படிக் கூறிக் கொண்டு சைக்கிளையும் எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினார். அம்மாவின் பெருமூச்சு ஏறி இறங்கியது. அங்கும் இங்கும் நடந்தாள்.

அம்மா ஸ்டோர் பக்கம் சென்றாள். நானும் பின்தொடர்ந்தேன்.

''நல்லகாரியமல்லவா நடந்திருக்கின்றது. பாருங்கள் அக்கா எமக்கும் பெரும் தொல்லை ஒன்று ஏற்பட்டு இருக்கின்றது. எனது குழந்தையின் பால்மா முடிவடைந்து விட்டது. எல்லா இடமும் ஒரே பிரச்சினை என்றபடியால் அவருக்கும் பால்மா கொண்டுவர முடியவில்லை. குழந்தைக்கும் எனது பால் கொடுக்க வேண்டாம் என டொக்டர் கூறி இருக்கின்றார். உங்களிடம் பால்மா ஏதுமில்லையா...'' அம்மா தொடர்ந்து கூறிக் கொண்டே போனாள்...

அந்தத் தமிழ்ப் பெண் கைக்குழந்தையை வாரி அணைத்தபடி அறையில் மூலையில் பிரமித்துப் போய் மரண பீதியில் இருப்பதைக் காண்கின்றேன்... அவளின் முகம் வெளுத்து போய் இருக்கிறது. அவள் வசித்தவீடு கண்ணெதிரிலேயே எரிந்து சாம்பலாகிப் போவதை அறையில் உள்ள சாரளத்தின் ஊடாக நோக்குகின்றாள்.

''நான் பால்மா கொடுப்பதில்லை... ஒரு நாளும் பிள்ளைக்கு நான் பால்மா கொடுத்ததும் இல்லை...'' மிகவும் சிரமப்பட்டு மெல்லிய குரலில் பதில் அளித்தாள்... அவளின் குழந்தை தாயின் அரவணைப்பில் பால் ஊறிஞ்சுவதைக் காண்கின்றேன்.

தந்தை வாசற்கதவை திறக்கும் சத்தம் கேட்டது.

என்ன கொண்டுவந்தீர்களா... அம்மா கேட்டுக் கொண்டே முன்னால் சென்றாள்.

''எல்லா இடமும் அலைந்தேன். அனைத்து கடைகளும் பூட்டி. வேலுவின் கடையில்தான் ஏனைய நேரங்களில் பால்மாப் பெட்டி இருக்கும். அந்தக் கடைக்கும் தீ வைத்து விட்டார்கள். இன்று பால்மா ஒரு இடமும் இல்லை...''

''இனி நாம் என்ன செய்வது...'' தந்தையின் கதைக்கு அம்மா கேள்விக்கணை தொடுத்தாள்.

''இனி என்ன செய்ய... இன்றைக்கு கொத்தமல்லி கொஞ்சம் கொடுப்போம்''

''பழக்கமும் இல்லை. குடிக்கவும் மாட்டாள். பால்குடிக்கும் நேரமும் வந்து விட்டது... எதற்கும் பார்க்கிறேன்'' எனக்கூறிக் கொண்டு அம்மா சமையல் அறைப்பக்கம் சென்றாள்.... கொத்தமல்லி சுட வைக்கத்தான் போலும்.

தங்கை நித்திரையால் கண்விழித்து அழும் சத்தம் கேட்டது. ''சின்னவள் எழும்பி விட்டாள், அவளைத் தூக்குங்கள்'' குசினி

www.tamilarangam.net



யில் இருந்து அம்மாவின் குரல்.

அழுகை கூடிக் கொண்டே சென்றது. அவளை நித்திரையாக்கத் தந்தை படாது பாடுபட்டார். விளையாட்டுப் பொருட்களைக் காட்டி வேடிக்கை காட்ட நான் எடுத்த முயற்சியும் பலிக்கவில்லை. அவள் இதையெல்லாம் பொருட்படுத்தாது பசியால் துடித்து அலரத் தொடங்கினாள். அழுகைக்குரல் அக்கம்பக்க நிசப்தத்தையும் குழப்பியது.

அம்மா பால் போத்தலுடன் வருகின்றாள்... அதில் கொத்தமல்லித் தண்ணீர் உள்ளது என எனக்குத் தெரியும்.

''என்ட செல்லக்குஞ்சு குடியம்மா'' எனக் கூறிக் கொண்டு அம்மா தங்கையை கையில் எடுத்தாள். வாய்க்குள் வைத்த பால் போத்தலை உறிஞ்சிவிட்டு தட்டிவிட்டாள். மேலும் பலத்து அழத்தொடங்கினாள். அம்மா தந்தையின் முகத்தையும் தந்தை அம்மாவின் முகத்தையும் நோக்குகின்றனர். பலமுறை பால் போத்தலை தங்கையின் வாயருகில் கொண்டு போயும் முயற்சி பலிதமாகவில்லை. அம்மா தங்கையை தாலாட்டத் தொடங்கினாள். அவளது அழுகை தணியவில்லை...

பிறந்தநாளில் இருந்து தங்கை இப்படி அழுததை ஒருநாளும் பார்த்ததில்லை. தந்தை மிகவும் குழப்பிப் போய் அவளின் பக்கம் பார்த்துக் கொண்டு இருந்தார். அவளின் அழுகைச் சத்தம் எனக்கு மிகவும் மனவேதனையைத் தந்தது.

''அக்கா ... அந்தப் பிள்ளையை இப்படிக் கொண்டு வாருங்கள்...'' தங்கையின் அழுகுரலுடன் ஸ்ரோர் பக்கம் இருந்து அந்தக் குரலும் கேட்டது... அது அந்த தமிழ்ப் பெண்ணின் குரல்... அம்மாவும் தந்தையும் வியப்புடன் அந்தப்பக்கம் நோக்கினார்கள்... அவளை என்னிடம் தாருங்கள் எனக்கூறிக் கொண்டு அப்பெண் முன்னால் வந்தாள். அவளின் குழந்தை மூலையில் ஓரமாய் படுத்திருப்பது தெரிகின்றது.

அவள் முன்னால் வந்து அம்மாவின் கையில் உள்ள குழந்தையை எடுத்து அணைத்துக் கொள்கிறாள்... குழந்தை அழுத வண்ணமே இருக்கிறது.

வயிற்றுப் பசி பொறுக்க மாட்டாமல் மேலும் உரத்து அழுகின்றாள். தாலாட்டும் பிரயோசனப்படவில்லை. மேலும் அழுகை கூடியதுதான் மிச்சம்.

தமிழ்ப்பெண் தங்கையை மார்போடு அணைத்துக் கொள்கிறாள். அழுகைக் குரல் கொஞ்சம் கொஞ்சமாய் குறைகின்றது... சீலையால் தங்கையின் முகத்தை மார்புடன் மூடிப் புதைத்துக் கொள்கிறாள். தங்கை ஆவலோடு பால் உறிஞ்சும் சத்தம் கேட்கிறது. தந்தை விறைத்துப்போய் அந்தப் பக்கம் பார்த்த வண்ணமாய் இருக்கின்றார். அம்மா கற்சிலையானாள். பெரும்மழை தணிந்தது போல் தங்கையின் அழுகுரல் ஓய்ந்தது. தங்கை பால் பருகுவதை பார்க்க என் கண்களில் நீர் சுரந்தது. அம்மா தனது சட்டைகரையோரத்தால் விழிகளால் வழிந்த நீரைத் துடைக்கிறாள்.

பக்கத்து வீடு எரிந்து தீச்சுவாலை வான்நோக்கி எழுகின்றது... வீடு எரிந்து கூரைத் தடிகள் ஒவ்வொன்றாக விழும் சத்தம் கேட்கிறது. எங்கும் ஒரே மரண ஓலம்... வீடுகளைத் தாக்கி உடைக்கும் சத்தம் இன்னும் கேட்கின்றது.. ஆனால் தனது யுத்தத்தில் வென்ற எனது தங்கை; தமிழ்ப்பெண்ணின் மார்பகத்திற்குள் முகம்புதைத்து பால் உறிஞ்சும் காட்சியை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்...

**சிங்கள மொழிமூலம்: பிரான்சீஸ் வீரப்பெரும.**

**தமிழில்: ஞானம் சுபாஷினி**

**நன்றி - ராவய**

வாழ்க்கை என்பது
அதிகாரத்துவத்தை
மையப்படுத்தி கட்டப்பட்ட
பெரிய புனை

**நடைமுறையிலிருக்கும் எல்லா விசயங்களையும் ஈவிரக்கமின்றி விமர்சனம் செய்தாக வேண்டும்.**

**மாவோ**

www.tamilarangam.net



# கவிதையின் எதிர்காலம்

மு.பொ

நமது கலை இலக்கியப் படைப்பின் நோக்கம் என்ன?

நாம் கலை இலக்கியப் படைப்பில் ஈடுபடுவதும் அவற்றைப் பிரசுரித்தோ, காட்சிப்படுத்தியோ பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கும் ஏன் ஆசைப்படுகின்றோம்?

உண்மையான கலைப்படைப்பென்பது ஒரு கண்டுபிடிப்பேயாகும். சமூக யதார்த்த நிலையில் எழுதப்பட்டாலும் சரி, ஆத்மாத்த யதார்த்தமாக அமைந்திருந்தாலும் சரி ஒன்று கலைப்படைப்பாக நிமிருமேயானால் அது ஒரு கலைஞனின் சிறந்த ஒரு கண்டுபிடிப்பென்றே கூறவேண்டும். ஒரு சிறந்த புகைப்படக் கலைஞன் தான் நிற்கும் கோணங்களின் மூலம் நாம் சதாகாணும் காட்சிகளில் புதுஇருப்பைத் தருவிப்பது போலவே சிறந்த கலைஇலக்கியவாதியும் இவ்வுலக வாழ்க்கையில் நாம் காணாதவொன்றை தன்படைப்பாற்றல் மூலம் நம்மைக் காணச் செய்கிறான். புதிய கண்டுபிடிப்புச் செய்கிறான். இதை வெளிக்கொணர்வதன் மூலம் அந்த அனுபவம் எங்களுக்குள்ளும் சுவடெரிந்து நடமாட வைக்கிறான். அது எமக்குள்ளும் ஒளியேற்றி வழிகாட்டுகிறது.

இதுவே ஒவ்வொரு உயர் கலைப் படைப்பினது தன்மையாகும். இந்நிலையில் கவிதையின் பங்களிப்பு எத்தகையது என்பதே எமது கேள்வியாகும்.

கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்று நாம் கைக்கொள்ளும் கலைவடிவங்களுள் கவிதையே உயர்கலை வெளிப்பாட்டின் உச்ச ஊடகமாகக் கொள்ளப்படுகிறது. மேலும் எல்லாவித கலை ஊடகங்களுள்ளும் இசைக்கே முதலிடம் அளித்துள்ளனர். இசைக்கு அடுத்தபடியாக கவிதையே முக்கியத்துவம் பெறுகிறது. அப்படியானால் இவ்விடத்தில் ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. ஏனைய கலைவடிவங்களை விட இசைக்கும் கவிதைக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எதன் அடிப்படையில் வைத்துத் தீர்மானிக்கப்படுகிறது என்பதே அக் கேள்வியாகும்.

இக்கேள்வி நியாயமானதும் அவசியமானதுமாகும். கவிதை பற்றி முக்கியமாக உயர்கலை வடிவங்கள் பற்றி ஆய்வு செய்ய முற்படும் எவருக்கும் இது உறுதுணையாக நிற்கும்.

ஆம், கவிதையின் மேன்மைத்துவம் எதனால் பெறப்படுகின்றது? இன்றைய மேற்கத்தைய தத்துவாசிரியர்கள் பலர் எம்மால் சொல்லக்கூடியது அல்லது பேசக்கூடியது எது அப்படிப் பேச முடியாதது எது என்று வரையறை வகுத்துள்ளனர். அவர்கள் கருத்துப்படி விஞ்ஞான ஆய்வுக்குள் வரக்கூடிய சகலவை பற்றியும் நமது சாதாரண நடைமுறை வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்தைப் பற்றியும் பேசலாம். ஏனையவை பற்றிப் பேசக்கூடாது. பேசினால் அதனால் எதுவித அர்த்தமும் பெறப்படப்போவதில்லை. உதாரணமாக ''சொர்க்கம் இருக்கிறது, அங்கு தேவர்கள் உள்ளார்கள்'' என்று நான் கூறினால் அது எந்தவித அர்த்தமும் தராத ஒன்றாகக் கருதப்படும். காரணம், இந்த சொர்க்கமும் தேவர்களும் இன்றைய விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்த முடியாத வெற்று வார்த்தைகள் என்றே சொல்லப்படும். இத்தகைய பகுப்புகளும் வரையறைகளும் மேற்கத்தைய தத்துவ ஞானத்துக்கு மட்டும் உரியதென்று மட்டும் நினைத்துக் கொள்ளக்கூடாது. கீழைத்தேயத் தத்துவ ஆய்வுமுறைகளும் இதையே அழுத்தியுள்ளன. பரமார்த்திக - வியவகாரிக, நிர்விகல்ப்ப - சவிகல்ப, ஸ்பாவ லக்ஷண - சமான்ய லஷ்ஷாண போன்ற இந்து, பௌத்த வரையறைகளும் இதையே அழுத்துகின்றன. ''கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை'' என்று பலரால் சாதாரணமாகக் கூறப்படும் இக் கூற்றும் நான் மேலே கூறிய எதை வார்த்தைகளால் சொல்லலாம்; எதைச் சொல்ல முடியாது என்பதன் வேறுவகையான வெளிக்காட்டலே.

இங்குதான் நமக்கு கவிதை கை கொடுக்கிறது.

எவையெவையெல்லாம் சொற்களால் தொடமுடியாத இருண்ட பிரதேசங்களென தத்துவாசிரியர்களால் பிரகடனப்படுத்தப்பட்டனவோ அவையவற்றினுள் எல்லாம் புகுந்து ஒளியேற்றி அவற்றையும் எம்போடு பேச வைக்கும் வல்லமை தனக்குண்டென்பதைக் காட்டியிருப்பதே ஏனைய கலைகளை விடக் கவிதை முதன்மை பெறுவதன் முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

'சொற்பதம் கடந்த'வற்றை சொற்களால் கவர்ந்து வந்து நம்முன் நிறுத்தும் ஆற்றல் கவிதைக்குரியதே. 'கண்டவர்

www.tamilarangam.net



விண்டதில்லை' எனக்கூறப்பட்ட ஒரு தனிப்பட்ட நபரின் அனுபவத்துக்கு மட்டுமே உரியதாய் இருந்த பேருண்மை அது கடவுளாய் இருந்தாலும் சரி. வேறு பொருளாய் இருந்தாலும் சரி- கவிதையின் நுண் இழையங்களால் ஈர்க்கப்பட்டு ஒரு பொது அனுபவத்துக்கு உட்படுத்தப்படுவதால் கவிதை தத்துவாசிரியர்களின் கூற்றுக்கு ஒரு சவாலாகவே நிற்கின்றது. இதுவே கவிதையின் உயர்ந்த கலைப் பெறுமானமாகும்.

இத்தகைய கவிதைகளை எத்தனை கவிஞர்களால் எழுத முடிகிறது என்பதே அடுத்த கேள்வியாகும். அதே நேரம் இத்தகைய கவிதைகளை எழுதுபவர்கள்தான் கவிஞர்களா. இத்தகைய கவிதைகள்தான் கவிதைகளா என்ற இன்னொரு கேள்வியும் எழுப்பப்படலாம்.

இக் கேள்வியும் நியாயமானதே. இத்தகைய கேள்வி எழுப்புவோரைப் பிழை சொல்ல முடியாது. காரணம், அவர்கள் அறிவும் உணர்வும் தளப்படுத்தும் இடங்களையே அவர்கள் அறிவார்கள். அந்நிலங்களிலேயே அவர்கள் கவிதைகள் காலூன்ற முடியும். இதை இன்னோர் விதத்திலேயும் விளக்கலாம். மீன் பிடிக்கத் தூண்டில் போடுபவன் இழுக்கும் மீன்களின் பருமனும் மெலிவும் அவன் தூண்டிலின் மிதப்பு தூண்டிலைச் செல்லவிடும் ஆழத்திலேயே தங்கியுள்ளது. ஆம், மிதப்பு விட்டுக் கொடுக்கும் ஆழம்.

இன்னொரு வகையினர் இன்னும் சுவையானவர்கள். இவர்கள் கருடனுக்குரிய பார்வையுடையவர்கள். எவ்வளவு தூரத்தில் கருடன் பறந்தாலும் அது தன் இரையிலேயே கண்ணாய் இருப்பது போல், இவர்கள் தாம் வாழும் சூழலையும் அதன் பண்புகளையும் பதிவு செய்தவாறே, அச்சூழலின் புழக்கத்திலுள்ள சொற்களுக்கு புதிய நிமிர்வு கொடுப்பதன் மூலம் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நம்புலன்களுக்கு அகப்படாத ஆத்மார்த்த தளங்களுக்குள் ஊருவிச் சென்று அங்கு சிலிர்த்துள்ள முத்துக்களைக் கொணர்ந்து எம்மைத் தரிசிக்க வைப்பவர்கள். இவர்கள் ஆற்றல் உன்னதமானது.

இவர்களுக்கு உதாரணமாக நீலாவாணனைக் காட்டலாம். அவரது கவிதையான ''ஓ வண்டிக்கார'' அதற்கு நல்ல உதாரணம்.

*''ஓ! ஓ! வண்டிக்கார! ஓட்டு வண்டியை ஓட்டு!*
*போவோம் புதிய நகரம் நோக்கி பொழுது போகமுன் ஓட்டு*
*நாவில் பூவில் கழனிகள் எங்கும் காதல் தோயும் பாட்டு*
*நாமும் நமது பயணந் தொலைய நடந்து செல்வோம் ஓட்டு!*
*பனியின் விழிநீர்த் துயரத்திரையில் பாதை மறையும் முன்னே*
*பிணியில் தேயும் நிலவின் நிழல் நம் பின்னால் தொடருமுன்னே.*
*ஓ! ஓ! வண்டிக்கார ஓட்டு வண்டியை ஓட்டு*
*போவோம் புதிய நகரம் நோக்கி பொழுதுபோகுமுன் ஓட்டு!*

இக்கவிதையில் நீலாவணன் மட்டக்களப்பு கிராமிய வளங்களைப் படம் பிடித்துக் காட்டும் சொற்களைப் பாவித்தவாறே, தமது பயணத்தைப் பற்றிக் கூறுகிறார். அவரது பயணம் எது? அவர் போகவிழைந்துள்ள 'புதிய நகரம்' எது என்பதே கேள்வி. ''பனியின் விழிநீர்த் துயரத்திரையில் பாதை மறையும் முன்னே'' என்றும் ''பிணியில் தேயும் நிலவின் நிழல் நம் பின்னால் தொடரும் முன்னே'' என்றும் அவர் இறுதியாக தான் போக விழையும் நகரத்திற்கு இட்டுச் செல்லும் வழியில் எதிர்ப்படப் போகின்றவையைப் பின்னணியாக எழுப்பிக் காட்டும்போது, நாம் எங்கோ, எங்கோ ஓர் அற்புதமான துயரம் தேய்ந்த உணர்வலைகளால் அள்ளுப்பட்டுச் செல்கிறோம். அவர் காணும் நகரம் எம்முன்னே பல கோணங்களில் விரிகிறது. இதுவே உயர்கவிதையின் பண்பாகும்.

இவ்வகையான ஒரு பண்பை மஹாகவி எழுதிய 'வீடும் வெளியும்' கவிதையிலும் காணலாம்.

*''செவ்விதழ்கள் சற்றுத் திறந்தால் உதிர்கின்ற*
*அவ்வளவும் முத்தே அடடா நம்- மவ்வளவைப்*
*பேச்சாகக் கொண்டாள் பிறர் நெஞ்சை பிய்ப்பதே*
*மூச்சானாள் பூச்சு முகம் சிவக்கும் கூச்சத்தால்*
*வெள்ளை உள்ளத்தில் விஷமேற்றிக் காமத்தைக்*
*கொள்ளைபோல் யார்க்கும் கொடுக்கின்றாள் - சுள்ளியிடை*
*நோவ நெடித்து நடக்கின்றாள் கால்தரையில்*
*பாவாமலேயே பழந்தமிழர் கோவிலே*
*கண்ட திருச்சிலை காலெடுத்து வைத்ததுவோ*

www.tamilarangam.net



*வண்டு மலர் வயிற்றைக் கிண்டி மது உண்டதே*
*போலச் சுழன்று ஆலவிழியின் அசைப்பினால்...*
*சேலை சிறிது சிலம்பச் சிலம்பினங்கள்*
*ஓலமிட கொங்கை உயர்ந்து விழக்*
*காலமெல்லாம் வென்ற கலையழகை வீசினாள்...''*

என்று கவிஞர் விலைமாதொருத்தியை வர்ணித்துச் சொல்லும் அழகு, விடுபட்ட பார்வையில் பார்க்கும்போது, பூசனைக்குரிய அம்மனின் கருவறைக்கே தம்மை மெல்ல மெல்ல இட்டுச் செல்வதைப் போன்ற ஓர் புதுஉணர்வை நாம்பெறலாம். மஹாகவியின் வழமையான யதார்த்தப் பண்புக்கவிதைகளில் இருந்து வித்தியாசமானது இது.

நீலாவணனை நினைத்தால் எனக்கு ஸ்பானிய கவிஞர் ''லோர்கா''வின் நினைவு ஓடிவரும். கிராமியப்பண்புகளை உள்வாங்கி, ஆத்மார்த்தப் பண்பு குழைய எழுதும் ''லோர்கா''வின் கவிதைகள் நிலாவணனை நினைவூட்டுவதில் வியப்பில்லை. அதேவேளை அதே ஸ்பானிய மரபின் வழிவந்த சிலிநாட்டுக் கவிஞன் ''பப்லே நெருடா'' தீவிர முற்போக்கு அரசியல் முகமுடையவராய் இருந்தாலும் கவிதையென்று வரும்போது அதை அதன் ஆத்மார்த்தப் பண்பில் யதார்த்த வார்ப்பில் அல்லது மஹாகவிபோல் அழகியல் பிறழாத யதார்த்த வார்ப்பில் தரவோ தவறுவதில்லை. அவர் விண்வெளி யாத்திரை என்று இன்று நடைபெறும் போட்டிகளுக்கு எதிராக எழுதிய (The Lazyone) என்ற கவிதையில்

*''வான் வெளிப் பரப்பில்*
*கோள்களுக்கிடையில்*
*லோகப்பொருட்கள் யாத்திரை செய்யும்*
*சந்திரத் தரையில் வன்முறை நிகழ*
*அமைதி அழிந்த நிலையில் நிலவு*

என்று ஆரம்பிக்கும் அவர்; பூமிக்கும் இந்த அவலம் ஏற்படக்கூடாதென்பதைக் காட்ட இவ்வுலகின் அழகை மிகுந்த ஆத்மார்த்தப் பண்பு திகழ தன் நாட்டின் வளங்களோடு இணைத்துக் காட்டுகிறார். இவரது இக்கவிதை சந்திரனுக்கு மனிதன் சென்றும் இன்னும் அவனிடமுள்ள சிறுமைகள் அகலவில்லை என்பதைக் காட்டும் மஹாகவியின் ''தேரும் திங்களும்'' கவிதையோடு ஏதா விதத்தில் தொடர்புற்று நிற்பதைக் காணலாம்.

இன்றுள்ள ஈழத்து இளங் கவிஞர்கள் அனைவரும் மஹாகவி, நீலாவணன் ஆகிய இவ்விரு கவிஞர்களும் விட்டுச் சென்ற கவிதைப் பண்புகளின் வாரிசுகளாகவும், அவர்களையும் விட இன்னும் பீறிட்டெழுந்து கவிதையின் உச்ச வெளிப்பாடான ஆத்மார்த்தத் தளங்களைத் தொடக்கூடியவர்களாகவும் உள்ளனர் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகாது.

எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன். சு.வில்லரத்தினம் போன்றவர்கள் மஹாகவி, நீலாவணன் ஆகியோர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பி, அவர்களில் இருந்து மேலும் விரிவடைந்த புதிய பரிமாணங்களைக் காட்டி நிற்க, இன்னோர் இவர்களுக்கடுத்த தலைமுறையொன்றும் பலபக்க வீச்சுகளோடு வளர்ந்து வருவது கண்கூடு. காலஞ்சென்ற சிவரமணி மிக நம்பிக்கையூட்டிய கவிஞர். அவர் இளமையிலேயே மறைந்து போனது நமது துர்ப்பாக்கியமே. இன்று சோலைக்கிளி, அஸ்வகோஸ், ஆத்மா, ஜபார், அவ்வை, மைதிலி, செவ்விந்தியன், விஸ்வநாதன் என்று பலர் பிரமிப்பூட்டும் வகையில் தம் படைப்பாற்றலை காட்டுபவர்களாய் நிற்கின்றனர்.

எம்.ஏ.நுஃமான் அவர்கள் இருபது வருடங்களுக்கு முன்னர் தான் எழுதிய 'உலகப் பரப்பின்' என்ற கவிதையில் அருட்டி விட்ட கவிதையின் உயிர்நாடியான ஆத்மார்த்தப் பண்பு- அதை அவர் தன் பின்வந்த கவிதைகளில் முழுஅளவில் வளர்த்துக் காட்டத் தவறிவிட்டாலும், அப்படி அவர் செய்ய முடியாமல் போனமைக்கு பல காரணங்களுண்டு. இன்று அப்பண்பின் அடைகாப்பாளர்களாகவும் அதில் உத்வேகம் கொண்டவர்களாகவும் இந்த இளந்தலைமுறையினர் நிற்கின்றனர். இதோ அதற்கெடுத்துக்காட்டாக அண்மையில் வெளிவந்த 'இருள்' என்ற அஸ்வகோஸின் கவிதை நிற்கிறது.

*''சிதழூறும் காயங்களிடையே*
*நானிருந்தேன்...*
*தொலைதூரங்களில்*
*மறைந்துபோன மைந்தரின் முகங்களை*

www.tamilarangam.net



*நானறியேன்.*
*என்று அவர் கவிதையை ஆரம்பித்து*
*''இறுதியாக*
*என்னிடம் வந்திருந்தான்*
*அவனது தேகம் குளிர்ந்திருந்தது.*
*இரத்தம் உறிஞ்ச நுளம்புகள் வரவில்லை*
*ஈக்களை அண்ட*
*நான் விடவில்லை''*

என்று எல்லோருடைய அடிவயிற்றையும் புரட்டிவிடும் வேதனையை அப்படியே வெளியெடுத்து நம்பார்வைக்கு வைத்துச் செல்கிறார். செல்ல முடியாதெனப்படும் தனிப்பட்ட ஒவ்வொருவரின் வேதனையையும் அப்படியே சொற்களால் நம்முன் படமெடுத்தாட வைக்கிறார் கவிஞர். இதுவே ஆத்மார்த்தப் பண்பின் முக்கிய விளக்கமாகும்.

இறுதியாக ஒரு முக்கியமான பிரச்சனை

எழுத்தாளர்கள் என்றும், கவிஞர்களென்றும், கலைஞர்களென்றும் மனித நாகரீகத்தின் உந்து சக்திகளென்றும் பீற்றிக் கொள்ளும் நாம் இன்று எமது இருப்பையே கேள்விக்குறியாக்கும் ஒரு அவல நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாய் உள்ளோம் என்பதே அது.

கொம்பியூற்றர் கவிதை எழுதுகிறது, இரும்பு மனிதன் மனித வாழ்க்கையையே ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றான்.

மனித இருப்பெனக் கூறப்படும் உயிர்ப்பு மையங்களே இயந்திரமயமாக்கப்படும் பெரும் ஆபத்தான நிலை. இன்னொரு பக்கத்தில் சுற்றுச்சூழல் மாசுபடுதல், ஓசோன் வலயத்தில் ஓட்டை விழுதல் இவற்றுக் கெதிராகக் குரல்கொடுக்கும் 'பசுமை அரசியல்' என்றெல்லாம் எம்மைச் சூழ ஒலிப்பவை எதைப் பிரதிபலிக்கின்றன? ஏகாதிபத்தியம், இனவாதம் என்று எமது சுதந்திர நடமாட்டத்தை வெளியிலிருந்து ஆக்கிரமித்து வரும் தீயசக்திகளைவிட நாமே வரங்கொடுத்து நம்மாலே வளர்க்கப்பட்டு, எமக்குள்ளிருந்து எழும் விஞ்ஞானம் என்னும் ''பஸ்மாசுரன்'' எமது சுதந்திரம்; மானுடம் என்பவையெல்லாவற்றையும் திருகி எறிந்து கேலிக்கூத்தாக்கி வருகிறான்.

கொம்பியூற்றர்களின் ''கலை'' ஈடுபாட்டுக்குப் பின்னர் நாமும் கவிதை பண்ணுகிறோம் என்பது ஒரு கேலிக்கூத்தாகவே படும். இந்நிலையில் எமது கலை இலக்கியப் போராட்டம் என்னவாக அமைய வேண்டும் என்பதே முக்கிய கேள்வியாகும். கலை இலக்கியப் புனைவுகளில் ஈடுபட்டவர்களில் எதிர்காலம் பற்றி எதிர்வு கூறியவர்களில் ''எச்.ஜி.வெல்ஸ்'', ''ஜோர்ஜ் ஓர்வெல்'' ஆகியவர்களை விட ''அல்டஸ் ஹக்ஸ்லிக்கே'' முதலிடம் கொடுக்க வேண்டும். ''ஜோர்ஜ் ஓவெல்''லின் 1984ஐ விட ''ஹக்ஸ்லி'' அதேகாலத்தில் எழுதிய ''மகத்தான புதிய உலகு'' இன்றைய உலகின் போக்கை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளது. எல்லாமே செயற்கையாக உற்பத்தியாக்கப்படும் ஓர் இயந்திர உலகில், செயற்கையாகப் படைக்கப்பட்ட புத்திஜீவி வர்க்கம் என்று மனித வாழ்க்கையே யந்திரமயமாக்கப்பட, உண்மையான மனிதன் போக்கிடமற்றுப் போகிறான். இதற்கெதிராகப் போராடி மனித ஊளுமையை நிலைநாட்ட அவனுக்குள் மறைந்துள்ள ஆத்மசக்தியே கைகொடுக்கலாம் என்ற கருத்து அதில் சூசகமாக வெளிக் கொணரப்படுகிறது.

இன்று எமக்குமுன் உள்ள நிலையும் இதுதான்.

இன்றைய கொம்பியூற்றர் கவிதை யுகத்தில் எங்கள் கலை இலக்கியப் போராட்டம் என்ன வகையில் இருக்க வேண்டும்? இதுதான் நாம் எழுப்பவேண்டிய கேள்வி.

காலஞ்சென்ற எழுத்தாளர் மு.த இதனால்தான் ''நீங்கள் இன்று எழுதும் நாவல், சிறுகதை, கவிதை என்பவை எல்லாம் காலங்கடந்தவையாகவே படுகின்றன. இனிவரும் தேவைகளுக்கும் போக்குக்கும் இவை தாக்குப் பிடிக்கப்போவதில்லை'' என்று கூறியவர். புதிய சொல்லாக்கங்கள், புதிய வார்ப்புமுறைகள் என்பவற்றோடு எதைத் தொட்டாலும் ஆத்மார்த்தத் தன்மை பீறிட்டெழும் புதிய ஊடகக் கலப்பு ஏற்பட வேண்டும் என்றும் கூறினார். இந்தப் பார்வையானது, சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், கவிஞர், விமர்சகர் என்று நாமே நம்மை வைத்திருக்கும் கைதி நிலையிலிருந்து எம்மை விடுவித்து அகன்ற பெருங்கலை விடுதலைக்குள் எம்மை விழுத்தலாம் என்பது எனது நம்பிக்கை

இதுவே படமெடுத்தாடும் இன்றைய பிரச்சினைகளுக்குரிய போராட்ட சக்தியாகவும் அமையலாம்.

www.tamilarangam.net

# சேர்ப்பிக்கப்பட்டதென்று அஞ்சிய மனம்



முகமின் தொலைந்தபின்
மனிதரென அலையும்
சாம்பரில் பூத்த சாவுமலிந்தமண்ணில்
நானுன்னைத் தேடுகிறேன்.

அலையும் பயணம் வழிதனில்;
உயிரில் விரவித்தவித்தென்மனம்
கனன்று எரியும் தருணம் வரைதனிலும்
அணையாது போனதே.

எங்கே சென்றாய் நீ?

ஈரம் கசியும் மண்ணின் நிறமிழந்த
மரணம் வந்தே தீரும் வாழ்வுதனில்;
உன்னருகாமை எனக்கில்லையேயென
என் கவிதை துடித்தழுகிறது.

கண்ணிமையின் உள்வழியே
மொய்தெறிக்கும் நிலவொளியில்
அச்சமதரும் மனித இருப்புபற்றி
பேசுதற்கு நீயில்லை.

ஆயிரம் சங்கதிகள் இருந்தும்
பலகோடி வார்த்தைகள் இருந்தும்
நீயில்லாத வாழ்வின் உட்தனிமையில்
பேசுதற்கு யாருளர்?

மண்ணைப் பிரிந்த துயர் குறித்து
உறவை அறுத்த பாவிகளின் வெறிகுறித்து
என் கண்ணீர் குறித்து, என் ஆவேசம்குறித்து
பேசுதற்கு யாருளர்?

கடந்த பின் வாரநாட்களிலும்
இனிப் புலராப் பொழுதுகளிலும்
யாருக்காக நான்;
என் வீணையை மீட்பேன்.

புழுதிபடிந்த இருட் குகையினுள்
எனது வீணை அழுத்திக் கிடக்கிறது
என்னைப் பாட யார் கேட்பர்
உன்னைத் தவிர.

முட்கள் நிறைந்த புதர்களிடையே
இதம் தரும் நிழலாக நீ இருப்பதை
யார் தடுத்தார்?

என் கவிதையின் துயர் குறித்து
நீ அறிவாயா?

எம். பௌஸர்